
UCSC

# ஆண்டறிக்கை
# 2015





## கொழும்புப்
## பல்கலைக்கழகத்தின்
## கணனிக் கல்வி நிறுவனம்

# கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| தூர நோக்கு மற்றும் செயற்பணி ........................................ | 03 |
| பணிப்பாளரின் கருத்துரை ........................................ | 04 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் பற்றிய சுருக்க் குறிப்பு ........ | 05 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் பற்றிய அறிமுகம் ................ | 07 |
| நிர்வாகம் ........................................ | 08 |
| கல்வி ........................................ | 10 |
| நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மாணவர்கள் ........................................ | 10 |
| இளமாணிப் பட்டக் கற்கை ........................................ | 12 |
| பட்டப்பின் கற்கை நிறுவகம் ........................................ | 17 |
| வெளிவாரிப் பட்டம் மற்றும் தொடர் கல்விப் பாடநெறி ........................................ | 15 |
| வெளிநாட்டு மாணவர்கள் ........................................ | 21 |
| ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் ........................................ | 21 |
| ஆராய்ச்சி ........................................ | 22 |
| ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் ........................................ | 22 |
| மாநாடு, கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ........................................ | 23 |
| பெற்றுக்கொண்ட விருதுகள் ........................................ | 24 |
| கல்விசார் ஆளணி ........................................ | 25 |
| கல்விசாரா ஆளணி : நிரந்தரம் (P) ஒப்பந்தம்/ஒப்படை(C/A)........................................ | 25 |
| நிதி ........................................ | 27 |
| மீண்டெழும் செலவினம் ........................................ | 27 |
| மூலதனச் செலவினம் ........................................ | 28 |
| செயற் திட்டங்கள்(உள்நாட்டு/வெளிநாட்டு நிதி) ........................................ | 28 |
| செயற் திட்டச் செலவு(உள்நாட்டு/வெளிநாட்டு நிதி) ........................................ | 29 |
| நிதிசார் முன்னேற்றம் (செலவு) ........................................ | 29 |
| நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்) ........................................ | 29 |
| நிதிச் செயற் திறன் பகுப்பாய்வு ........................................ | 30 |
| 2015 இல் பெற்றுக்கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள் ........................................ | 30 |
| இந்த அறிக்கையுடன் தொடர்பான ஏனைய தகவல்கள்/செயற் திறன்........................................ | 31 |
| கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்று - 2015.. | 32 |

# கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம்

## 2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை

## தூர நோக்கு மற்றும் செயற் பணி

---

### தூர நோக்கு

கற்கை மற்றும் ஆராய்ச்சிகள் ஊடாக நவீன அறிவின் எல்லைகளைக் கடந்து கணனி அறிவில் உலகளாவிய ரீதியில் உயர்ந்த இடத்தை வகித்தல்

### செயற் பணிக் கூற்று

உலகளாவிய மூலோபாயத் தொடர்புகளை வளர்த்து கலப்பினத் துறை ஆய்வுகளை விருத்தி செய்து எமது நாட்டை பிராந்தியத்தின் அறிவின் மையமாக மாற்றியமைப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் தொழில்துறை சார்ந்த ஆற்றல்கள், தலைமைத்துவப் பண்பு மற்றும் நேர்மைமிக்க சமூகப் பொறுப்பையுடைய தொழில் நிபுணர்களை உருவாக்கி கணனி அறிவை விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல்.

### இலக்குகள்

1. கணனி பற்றிய கற்கையில் மிகச் சிறந்த நிலையமாகப் பரிணமித்தல்.
2. கணனியின் எல்லைகளை விளக்குவதற்கு மற்றும் கலப்பினத் துறை ஆய்வுகளை விருத்தி செய்தல்
3. தொழில் முயற்சிகள் துறை ஆற்றல்கள், தலைமைத்துவப் பண்பு மற்றும் நேர்மைமிக்க சமூகப் பொறுப்பையுடைய தொழில் நிபுணர்களை உருவாக்குதல்.
4. பயன்மிக்க சேவை மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான சூழலை உருவாக்குதல் மற்றும் பேணி வரல்.
5. நிறுவனத்தின் பிரதிரூபத்தை மேம்படுத்தல்
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக சமூகத்தை வலுவூட்டல்
7. நாட்டை அறிவின் மையமாக மாற்றியமைப்பதற்காக விசேட பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழில் சேவை உருவாக்கம்.

## பணிப்பாளரின் கருத்துரை

கணனி பற்றிய கற்கை நிலையமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் இத்துறையில் நவீன கண்டுபிடிப்புகளுடன் இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப்பின் கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களைப் போன்றே தகவல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை பயிற்றுவிக்கும் அலுவலில் ஈடுபட்டு வருகின்றது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பாடத் திட்டத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் 04 பட்டப் பாடநெறிகளுக்காக உள்வாரியாக 770 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், குறிப்பிட்ட விஞ்ஞான ரீதியான பாடத் திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு சம்பந்தமான 997 விஞ்ஞானமாணிப் பட்டதாரிகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், 1890 மாணவர்களுக்கு வெளிவாரியாகதகவல் தொழில்நுட்பப் பட்டப் பாடநெறியைப் பயிலுவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 452 மாணவர்கள் முதுமாணிப் பட்டத்திற்குப் பயிற்றுவிக்கப்பட்டதுடன், 51 பேர் ஆராய்ச்சிப் பட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். முன்னைய ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிடையே 227 பேர் இளமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். மற்றும் ஒரு கலாநிதிப் பட்டம், மூன்று முதுமாணிப் பட்டங்கள் அடங்கலாக 121 பேர் பட்டப்பின் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

முறையே 95 மில்லியன் ரூபா மற்றும் 70 மில்லியன் ரூபா வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்திருக்கும் பட்டப்பின் கற்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான வெளிவாரிப் பட்டம் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் பிரதான வருமான மூலங்களாகும். கட்டிடங்களை நிர்மாணிக்கும் திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுக் கொடுப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வாக்குறுதியளித்த போதிலும் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதனை உறுதி செய்யும் வகையில் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் இந்த வருமானத்தினை முதலீடு செய்துள்ளதுடன், அதற்காக 82 மில். ரூபாவை செலவிட்டது. உபகரணங்களைச் செலவு செய்வதற்கும் சேர்த்து அரசாங்கத்தினால் 45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதனால் உபகரணங்களுக்காக மேலதிகமாக 20 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.வெளிநாட்டில் நடைபெறும் கருத்தரங்கருகளில் ஆளணியினர் கலந்துகொள்வதற்காக 6.1 மில்லியன் ரூபாவும் ஆளணிக்கான காப்புறுதித் திட்டத்திற்காக 5 மில். ரூபாவும் மாணவர்களுக்கான அனர்த்த நிதியத்திற்காக 4.1 மில். ரூபாவும் ஆளணி நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக 5 மில். ரூபாவும் இந்த நிறுவனத்தினால் செலவிடப்பட்டுள்ளது.

ஏனைய பயிற்சி நிறுவனங்களைப் பார்க்கிலும் தனிச் சிறப்புமிக்க நிறுவனமொன்றாகும் நோக்கில் ஆராய்ச்சிகளின் ஊடாக நவீன அறிவைப் பெற்றுக் கொள்வதன் மீது இந்தக் கற்கை நிறுவனம் அதிக கவனத்தைச் செலுத்துகின்றது. ஆளணியைச் சேர்ந்தவர்களால் கருத்தரங்குகள் மற்றும் 64 சஞ்சிகைகளில் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய சங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள மீன் ஏற்றுமதித் தடையை அகற்றுதல், விவசாயம் மற்றும் விரல் அடையாளம் உட்பட தேசியப் பரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த நிறுவனத்தின் பங்களிப்பு சம்பந்தமாக சில சாதகமான கருத்துக்கள் குறிப்பிடப்பிடுவது இதன் நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிப்பதாக அமையும். இந்த நிறுவனம் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான ஆலோசனைத் திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றது.

08 முக்கிய விருதுகளைப் பெற்றுக் கொண்டதன் ஊடாக ஆளணி மற்றும் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தினை வெற்றி கொண்டுள்ளார்கள். சமூகத்திற்கான அவர்களது பங்களிப்பாக ஆளணியினர் வெளிவாரியான அமைப்புக்கள், சபைகள் மற்றும் தொழில் அமைப்புக்களுக்கு பங்களிப்பை வழங்குவதுடன் மாணவர்கள் கிராமியப் பிரதேச பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்ட தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டங்களை செயற்படுத்தினர்.

21 ஆம் நுற்றாண்டுக்கான உயர் கல்வித் திட்டத்தின் ஊடாக வெளிவாரிப் பட்டத்திற்கு மற்றும் வணிகமயப்படுத்தல் ஆராய்ச்சிகளுக்கான உத்தேச நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அனைத்துப் பல்கலைக்கழககங்களினதும் மாணவர்களின் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான தேர்ச்சியை பரிசீலித்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் உள்ளீர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள், 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தின் ஊடாக நிதி வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய சவால்மிக்க திட்டங்களுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கைகள் நிறுவனம் உதவி வழங்கியுள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுக்காக தேசிய ஆராய்ச்சி சபை (NRC) மற்றும் தேசிய விஞ்ஞான அமைப்பினால் (NSF) வழங்கப்படும் சில உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கைகள் நிறுவனத்தின் ஆளணியினரால் முடியுமாகியது.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக நிறுவனம் முகங்கொடுத்த பாரிய பிரச்சினையான இடவசதிகள் பற்றாக்குறையான நீண்ட காலமாக நிலவிய பௌதீக வளங்கள் அபிவிருத்தி இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் எதிர் கால விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிப்பதற்காக மேலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் சில செயற் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. நாட்டின் மிகவும் தகுதி பெற்ற கணனி ஆளணியை வைத்திருப்பதுடன், இந்த ஆண்டில் மேலும் சிலர் தமது கலாநிதி (முனைவர்) பட்டத்தை நிறைவு செய்யவுள்ளனர். நிறுவனத்தில் தற்போது 24 கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் இருப்பதுடன், அது கல்விசார் குழாமை மேலும் பலப்படுத்தி தனது மனித வளத்திற்கான பற்றாக்குறையை அரைவாசியாகக் குறைத்துள்ளது.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பட்டப் பாடநெறிகளை சர்வதேச தரங்களுடன் இணையான வகையில் வரிசைப்படுத்துவதற்காக பாடத் திட்டங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் எமது பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புக்களும் பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டங்களுக்கு இணையானதாகவோ அவற்றிலும் மேலானதாகவோ இருக்கின்றது. ஒரு ஆண்டினுள் இளமாணி மற்றும் பட்டப்பின் கற்கைகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதனைப் போன்றே ஆராய்ச்சிகள் உட்பட இளமாணி மற்றும் பட்டப்பின் கற்கை மாணவர்களின் படைப்புக்களிலும் அதிகரிப்பு அவதானிக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் எமது பட்டப் பாடநெறிக்காக வெளிநாட்டு மாணவன் ஒருவனையும் ஈர்த்துக் கொண்டுள்ளது.

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் பற்றிய பொழிப்பு

| | | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| **கல்வி கற்பவர்கள் (பதிவு செய்துள்ளவர்கள் / பட்டம் பெற்றவர்கள்)** | | | | |
| உள்வாரி இளமாணிப் பட்டதாரிகள் | மொத்தம் | 769 | 757 | 770 |
| | சேர்ந்தவர்கள் | 254 | 212 | 256 |
| | வெளியானவர்கள் | 212 | 215 | 247 |
| விஞ்ஞானமாணி இளமாணிப் பட்டதாரிகள் | | 1275 | 1119 | 997 |
| வெளிவாரி டிப்ளோமா | மொத்தம் | 4175 | 4535 | 4075 |
| | சேர்ந்தவர்கள் | 2034 | 2379 | 1890 |
| | வெளியானவர்கள் | 611 | 515 | 334 |
| வெளிவாரி உயர் டிப்ளோமா | மொத்தம் | 2391 | 2583 | 2509 |
| | சேர்ந்தவர்கள் | 714 | 721 | 690 |
| | வெளியானவர்கள் | 305 | 339 | 226 |
| வெளிவாரிப் பட்டம் | மொத்தம் | 1416 | 1537 | 1651 |
| | சேர்ந்தவர்கள் | 312 | 347 | 346 |
| | வெளியானவர்கள் | 194 | 225 | 260 |
| பட்டப்பின் கற்கை(முதுமாணி) | மொத்தம் | 303 | 370 | 452 |
| | சேர்ந்தவர்கள் | 143 | 209 | 186 |
| | வெளியானவர்கள் | 122 | 107 | 121 |
| தொடர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் | | 309 | 389 | 339 |
| **ஆராய்ச்சி** | | | | |
| ஆராய்ச்சி(ஆய்வியல் முதுமாணி பட்டம்/முனைவர்(கலாநிதி)) | மொத்தம் | 39/07 | 41/09 | 42/09 |
| | சேர்ந்தவர்கள் | 09 | 07/06 | 08/01 |
| | வெளியானவர்கள் | 6 | 3/1 | 3/1 |
| ஆராய்ச்சித் திட்டங்கள் | மொத்தம் | 05 | 10 | 11 |
| | புதிய | 1 | 6 | 3 |
| வெளயீடுகள் | | 70 | 67 | 71 |
| **ஆலோசனைத் திட்டங்கள்** | | | | |
| | உள்நாட்டு | 10 | 10 | 23 |
| | வெளிநாட்டு | - | - | 1 |
| சமூகப் பொறுப்பு வேலைத் திட்டங்கள் | | 10 | 10 | 10 |

| | | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| **நிர்வாகம்** | | | | |
| நிரந்தர கல்விசார் ஆளணி | மொத்தம் | 36 | 40 | 38 |
| | பேராசிரியர் | 02 | 03 | 03 |
| | கலாநிதி | 20 | 20 | 23 |
| | முதுமாணி | 10 | 11 | 09 |
| நிரந்தர கல்விசார் உதவி ஆளணி | | 04 | 04 | 04 |
| தற்காலிக கல்விசார் ஆளணி (ஆலோசகர் மற்றும் உதவி விரிவுரையாளர்) | | 15 | 30 | 27 |
| நிரந்தர நிர்வாக மற்றும் கல்விசாரா ஆளணி | | 40 | 40 | 37 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஆளணி (அமைய மற்றும் பயிலுனர்கள் உட்பட) | | 49 | 42 | 42 |
| ஆராய்ச்சி /செயற் திட்ட ஆளணி | | 11 | 27 | 24 |
| **நிதி** | | | | |
| | | 2013 | 2014 | 2015 |
| வருடாந்த மீண்டெழும் செலவினம் (மில்.ரூபா) | | 133 | 161 | 177 |
| திறைசேரியிடமிருந்து (மீண்டெழும்) (மில்.ரூபா) | | 90 | 94 | 122 |
| திறைசேரியிடமிருந்து (மூலதனம்) (மில்.ரூபா) - உண்மையாகப் பெறப்பட்டது. | | 26 | 15 | 45 |
| ஈட்டிய வருமானம் | | 242 | 247 | 211 |
| இளமாணிப் பட்டத்திற்கான கொ.ப.க.க.நிறுவனத்தின் பங்களிப்பு (மில்.ரூபா) (ஈட்டிய வருமானத்தின் வீதமாக) | | 88 (37%) | 185 (75%) | 122 (58%) |
| கொ.ப.க.க.நிறுவனத்தின் வரவு செலவு (மில்.ரூபா) | | 363 | 577 | 622 |
| ஆராய்ச்சி / செயற் திட்டங்கள் (மில்.ரூபா) | | 9.3 | 9.7 | 14 |
| ஒரு ஊழியருக்கான செலவு (ரூபா"000) ஒரு வருடத்திற்கு | | 774 | 795 | 881 |
| ஒரு மாணவருக்கான செலவு (ரூபா"000) - திறைசேரி மீண்டெழும் | | 152 | 190 | 195 |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | | | | |
| நூலகப் புத்தகங்கள் | | 8,303 | 8,678 | 8,783 |
| கணனிகள் : ஆளணிக்காக | | 1:1 | | |
| கணனிகள் : மாணவர்களுக்கு (சாதாரணம் மற்றும் விசேடம்) | | 1:4<br>1:1 | | |
| இட வசதி (ஒரு ஊழியருக்கு) (சதுர மீட்டர்) | | 10.42 | 11.70 | 11.70 |
| இட வசதி (ஒரு மாணவனுக்கு) (சதுர மீட்டர்) | | 2.68 | 4.77 | 4.77 |

## கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கைகள் நிறுவனம் பற்றிய அறிமுகம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம்(UCSC), கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனித் திணைக்களம்(DCS) மற்றும் கணனித் தொழில்நுட்ப நிறுவனம் (ICT) என்பவற்றை ஒன்றிணைப்பதன் ஊடாக கணனி விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமான உயர் கல்வியை வழங்கும்,மேம்படுத்தும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக உயர் கல்வி நிறுவனமாக 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஊடாக இறுதியாக திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 24 (அ) 1 உறுப்புரையின் கீழான கட்டளையின் பிரகாரம் 2002 செப்டெம்பர் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. சட்டத்தின் வரைவிலக்கணப்படி அது ஒரு உயர் கல்வி நிறுவனமாகும். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்திற்கான (UCSC) கட்டளைச் சட்டம் 2002 நவம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் (வர்த்தமானி இலக்கம்1262/32) டிஜிட்டல் டிஜிட்டல் குற்றவியல் ஆய்வு நிலையத்தை உட்படுத்துவதற்காக 2011 ஜூலை மாதம் 22 ஆம் திகதி (வர்த்தமானி இலக்கம்1715/32) திருத்தப்பட்டது.

### வரலாறு பற்றிய சுருக்கம்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 1967 ஆம் ஆண்டு விஞ்ஞான பீடத்துடன் இணைந்த வகையில் தனியான பிரிவாக புள்ளிவிபரவியல் விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டவுடனேயே கணனிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்தப் பிரிவு புள்ளிவிபரவியல் ஆலோசனை மற்றும் தரவுகள் தயாரிக்கும் சேவை நிலையமாக விருத்தியடைந்தது. இது இதன் எதிர்கால அபிவிருத்திக்கு அடித்தளமாக விளங்கியது. 1985 ஆம் ஆண்டில் இந்த நிலையம் புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவாக (DSCS) மாற்றியமைக்கப்பட்டது. இந்த கற்கைப் பிரிவின் பிரதான பணி புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானம் சம்பந்தமான விசேட பட்டப் படிப்பை நடாத்துவதாகும். புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவானது ஒரு மாணவர் குழுவில் 40 பேருக்கு மாத்திரம் கணனி விஞ்ஞானம் பற்றிய விசேட கற்கையை மேற்கொண்டதுடன் அது கணனி விஞ்ஞானத் துறையில் அதிகரித்து வரும் கேள்வியை ஈடு செய்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இருக்கவில்லை.

1997 இல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஊடாக 50 மாணவர்களைக் கொண்ட குழுவொன்று கணனி விஞ்ஞானக் கற்கையை மேற்கொள்வதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் அப்போது கணனி விஞ்ஞானத் துறையில் அதிகரித்து வரும் கேள்வியை ஈடு செய்வதற்கு புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவின் கணனி விஞ்ஞான உப பிரிவு வேறான கற்கைப் பிரிவாக விரிவாக்கப்படல் வேண்டுமென அநேகமானோர் புரிந்து கொண்டிருந்தனர். அதன் பெறுபேறாக 2001 ஆம் ஆண்டில் புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவானது கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவு மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைப் பிரிவு என இரண்டு கற்கைப் பிரிவுகளாக வேறாக்கப்பட்டது.

கணனி விஞ்ஞானக் கற்கைப் பிரிவானது பீடமொன்றின் வரையறைக்குள் செயற்படும்போது தனது வரையறைகளை இனங்கண்டு கொண்டதுடன், எதிர் கால விருத்திச் சாத்தியக்கூறுகளிலிருந்து உரிய பயனைப் பெற்றுக் கொள்வதற்காக பலமான தொழில்நுட்பத் தொடர்பின் முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்பட்டது. தொழில்நுட்பம் மீது கவனத்தை ஈர்க்கும் கணனித் தொழில்நுட்ப நிறுவனம்(ICT) மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவின் மீது கவனம் செலுத்தும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கைப் பிரிவுக்கிடையே மூலோபாய ரீதியிலான ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் புரிந்துணர்ந்து கொண்டது.

தொழில்நுட்பத்துடன் பலமான தொடர்பையும், அத்துடன் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுடனான உயரிய நிறுவன ரீதியான தொடர்பை கணனித் தொழில்நுட்ப நிறுவனம் (ICT) கொண்டிருந்தது. அவர்களது வணிகச் செயற்பாட்டின்போது அதிகளவு அதிகாரத்தை அந்த நிறுவனம் அனுபவித்ததுடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA), சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் (SIDA)மற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்களிடமிருந்து அநேகமான வளங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு அதனூடாக வாய்ப்புக் கிடைத்தது.

இந்த ஒன்றினைப்பானது 2002 ஆம் ஆண்டில் செப்டெம்பர் 1 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தை தோற்றுவித்ததுடன், நிறுவனத்தின் உருவாக்கத்திற்கான பல்வேறு முயற்சிகளுக்கு தூர நோக்குடன் வழிகாட்டிய பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க அவர்கள் அதன் ஆரம்ப பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்த சகல விடயங்களின் ஊடாகவும் இலங்கை பல்கலைக்கழக முறைமையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மிகச் சிறந்த நிலையமாக தனது நிறுவனத்தை அமைத்துக் கொள்வதற்கு கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்திற்கு முடியுமாகியுள்ளது.

பல்கலைக்கழக வளவை விரிவுபடுத்துவதன் கீழ் கிழக்கு மற்றும் மேற்குப்புறக் கட்டிடத் தொகுதியை விரிவுபடுத்துவதன் ஊடாக மேலதிக மாடியொன்று மற்றும் மேற்பரப்புக் கூரையை (roof top) கணனி கற்கை நிறுவனம் நிர்மாணித்துள்ளது. பரப்பளவை சிறிய அளவினால் அதிகரித்துக் கொள்வதற்காக கட்டிடத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் புறமாக மேலதிகமாக இரண்டு பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்போது கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் நிர்வாக மற்றும் சிற்றுண்டிச் சாலைக் கட்டிடத்தில் இரண்டு மாடிகளை நிர்மாணித்துள்ளதுடன் இளமாணிப் பட்டத்திற்காக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கேட்போர்கூடம் மற்றும் விரிவுரை மண்டபம் நிர்மாணிக்கும் பணியை

ஆரம்பித்துள்ளது. இந்த முயற்சியினால் நீண்ட காலமாக ஒரு மாணவனுக்கு கற்கை வசதிக்காக 2 சதுர மீட்டர் குறைந்த பரப்பளவாகக் காணப்பட்ட இட வசதியை 4.8 சதுர மீட்டர் பரப்பளவாக கணிசமான அளவினால் அதிகரிக்க முடிந்தது.

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கட்டமைப்பு

இந்த ஆண்டிலும் மூன்று கற்கைப் பிரிவுகளும் ஆறு நிலையங்களும் தமது நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதனை தொடர்ந்தும் மேற்கொண்டன.

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கற்கைப் பிரிவுகள்

இளமாணிப் பட்டப் பாடநெறிக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஊடாக நேரடியாக கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாமை காரணமாக இளமாணிப் பட்டக் கற்கை நடவடிக்கைகளுக்காக ஈட்டிய வருமானத்தின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டது. நிறுவனத்திற்கு மூன்று கற்கைப் பிரிவுகள் காணப்படுவதுடன் கல்விசார் ஆளணியைச் சேர்ந்தவர்கள் அவர்களது தனிச் சிறப்பு மற்றும் கற்பித்தல் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் இப் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு கற்கைப் பிரிவும் தமது பாடநெறிகளுக்கென பட்டங்களை வழங்குவதில்லை. கற்கைப் பிரிவுகளின் மூன்று தலைவர்களும் இளமாணிப் பட்டம், முதுமாணி / பட்டப்பின் கற்கைகள் மற்றும் தொடர் கல்விப் பாடநெறிகளின் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டுள்ளனர். அந்த 03 கற்கைப் பிரிவுகளாவன,

1. கணனி மற்றும் நுண்ணறிவுத் தொகுதி (CIS)
2. தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம் (CMT)
3. தகவல் தொகுதி பொறியியல் (ISE)

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்குரிய நிலையங்கள்

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் பல்வேறு இரண்டாம் நிலைச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. இந்தச் செயற்பாடுகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட ஆறு நிலையங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகளை முகாமைத்துவப்படுத்துவதற்காக ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆறு நிலையங்களும் கீழ் வருமாறு,

1. உயர் மட்ட டிஜிட்டல் பல்லூடக நிலையம்( ADMTC)
2. கணனி சேவைகள் நிலையம் (CSC)
3. வெளிவாரிப் பரீட்சைகள் பற்றிய நிலையம் (EDC)
4. இலத்திரணியல் கல்வி (e-Learning) பற்றிய நிலையம்(eLC)
5. தொழில் அபிவிருத்தி பற்றிய நிலையம் (PDC)
6. டிஜிட்டல் குற்றவியல் ஆய்வு நிலையம் ( CDF)

## நிர்வாகம்

கடந்த ஆண்டில் 2014 - 2018 காலப் பகுதிக்கான கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதில் கல்வி, ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற முன்னர் நிலவிய அடிப்படைச் செயற்பாட்டுத் துறைகளிலிருந்து விலகி கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்ட வேலைத் திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### முகாமைத்துவம்

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் கற்கைப் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் நிலைய ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடன் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சகல சட்ட ரீதியான மற்றும் தெரிவுக் குழுக்களின் தலைமைப் பொறுப்பை பணிப்பாளர் வகிப்பார்.

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள்

**பணிப்பாளர்**: பேராசிரியர் ஜீ.என். விக்ரமநாயக்க,**பிரதிப் பணிப்பாளர்**: பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே

### கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கற்கைப் பிரிவுத் தலைவர்கள்

**CIS**: கலாநிதி டீ.ஏ.எஸ்.அத்துகோரல **CMT**: திரு.ஜீ.கே.ஏ.டயஸ் (ஒக்டோபர் வரை) மற்றும் கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ.விமலரத்ன (நவம்பர் முதல்) **ISE**: பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே

**கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் நிலையங்களின் ஒருங்கிணைப்பாளர்கள்**
**ADMTC:** திரு.எஸ்.ரீ.நந்தசார; **CSC:** திரு.எல்.பீ.ஜயசிங்க; **EDC:** திரு.எல்.பீ.ஜயசிங்க (செப்டெம்பர் முதல்); **eLC:** கலாநிதி டீ.டீ.கருணாரத்ன; **PDC:** கலாநிதி எஸ்.எம்.கே.டீ.அருணதிலக்க; **CDF:** திரு.கே.எஸ்.குணதிலக்க

**அதிகார சபைகள்**
முகாமைத்துவ சபை, கல்வி நிர்வாக சபை, கற்கைகள் சபை, கற்கைப் பிரிவுகள் மற்றும் நிலையங்களே நிறுவனத்தின் அதிகார சபை சபைகளாகும்.

**முகாமைத்துவ சபை**

புதிய பல்கலைக்கழக நிர்வாக சபையை நியமனம் செய்வதற்கு மற்றும் சபைக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பெயபேராசிர் குறிப்பிடுபவர்களை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் குறைந்த எண்ணிக்கையில் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் 11 மாதாந்தக் கூட்டங்களும் 01 விசேட கூட்டமும் நடாத்தப்பட்டன. முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் கீழ்வருமாறு.

**பணிப்பாளர் (தலைவர்)**: பேராசிரியர் ஜீ.என்.விக்கிரமநாயக்க, **பிரதிப் பணிப்பாளர்**: பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே, கணக்காய்வுக் குழு **(பெயர் குறிப்பிடப்பட்டது) செயலாளர், உயர் கல்வி அமைச்சு :** திரு.பியதாச ரணேபுர (மார்ச் வரை) மற்றும் திரு.எம்.தேவசுரேந்திர (மே மாதம் முதல்). **(பெயர் குறிப்பிடப்பட்டது) நிதி அமைச்சு :** திரு.டீ.சீ.ஏ.குணவர்தன (ஜனவரி) மற்றும் திருமதி டீ.எம்.ஏ.ஹரஸ்கம (பெப்ரவரி முதல்). **பீடாதிபதி, விஞ்ஞான பீடம்**: பேராசிரியர் கே.ஆர்.ஆர்.மகாநாமம. **கற்கைப் பிரிவுத் தலைவர்கள் ஊஜஞ/ஊஆவு/ஐஞந:** கலாநிதி டீ.ஏ.எஸ்.அத்துகோரால, திரு.ஜீ.கே.ஏ.டயஸ் (ஒக்டோபர் வரை) மற்றும் கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ.விமலரத்ன (நவம்பர் முதல்)பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே

**கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் நிர்வாக சபைக்காக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்:** திரு.சீ.மாலியத்த (மார்ச் வரை), திரு.ரஞ்சித் ஜீ.ருபசிங்க(ஜனவரி), திரு.மஹிந்த மதிஹாவெவ (பெப்ரவரி - மார்ச்), திரு. கே.கனகீஸ்வரன் (ஜுன் - நவ.), கலாநிதி சஞ்சீவ வீரவர்ன (ஜுன் முதல்), ஜே.எம்.சுவாமிநாதன் (டிசம்பர் முதல்).**செனட்டிற்காக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்**: பேராசிரியர் ஜீ.எஸ்.எம்.குணரத்ன (ஜனவரி - பெப்ரவரி), பேராசிரியர் கே.எச். தென்னகோன் (ஜனவரி - பெப்ரவரி), பேராசிரியர் சுமேதா ஜயநெத்தி (மே முதல்) மற்றும் கலாநிதி பவித்ரா கைலாசபதி (மே முதல்) **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்:** திரு.சுஜீவ முதலிகே (ஜன.), திரு.ருவன் கேரகல (ஜுன் முதல்) மற்றும் தேசமான்ய திரு. எம்.டீ.டீ.பீரிஸ் (ஜன மற்றும் ஜுன் முதல்). **தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் பிரதிநிதிகள்:** திரு.டீ.பீ.சப்பரமாது (ஜனவரி), திரு.மனோ சேகரம் மற்றும் திரு.ரணில் ராஜபக்ஷ(பெப்ரவரி முதல்).**கல்வி நிர்வாக சபைக்காக பெயர் குறிப்பிடப்பட்டவர்கள்:**கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ.விமலரத்ன (ஜன. - பெப்.), கலாநிதி டீ.என்.ரணசிங்க (ஜன. - பெப்.), திரு. எஸ்.ரீ.நந்தசார (மார்ச் முதல்), கலாநிதி சீ.ஐ.கெப்பிட்டியாகம (மார்ச் முதல்) மற்றும் கலாநிதி ரீ.என்.கே. த சொய்சா (மே முதல்)**முன்னாள் பணிப்பாளர் (அழைப்பு) :** கலாநிதி ஏ.ஆர்.வீரசிங்க (ஒக்டோபர் வரை)

இரண்டு உப குழுக்கள், நிதி மற்றும் முகாமைத்துவக் குழு, கணக்காய்வுக் குழு என்பன முகாமைத்துவ சபைக்கு உதவி புரிந்தன. அங்கத்தவர்களை நியமிப்பதற்குத் தாமதமாகியமையும் இந்த உப குழுக்களை நடாத்துவதன் மீது பாதிப்புச் செலுத்தியது. இரண்டு குழுக்களுக்கும் ஒரு வருடத்திற்குள் முறையே 03 கூட்டங்களை மாத்திரமே நடாத்த முடியுமாகியது. இரண்டு குழுக்களினதும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**நிதி மற்றும் முகாமைத்துவக் குழு**

பணிப்பாளர் (தலைவர்) : பேராசிரியர் ஜீ.என்.விக்கிரமநாயக்க, பிரதிப் பணிப்பாளர் : பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே,(பெயர் குறிப்பிடப்பட்டது) செயலாளர், உயர் கல்வி அமைச்சு : திரு.பியதாச ரணேபுர (மார்ச் வரை),பீடாதிபதி, விஞ்ஞான பீடம்:பேராசிரியர் கே.ஆர்.ஆர்.மகாநாம,திரு.சுஜீவ முதலிகே (ஜன. வரை), தேசமான்ய திரு.எம்.டீ.டீ.பீரிஸ் (ஜன.முதல் மற்றும் ஜுன் முதல்),கலாநிதி பவித்ரா கைலாசபதி (மே முதல்), திரு.மனோ சேகரம்.

**கணக்காய்வுக் குழு**
தலைவர் : திருமதி டீ.எம்.ஏ.ஹரஸ்கம (பெப்ரவரி முதல்), பேராசிரியர் ஜீ.என்..விக்கிரமநாயக்க (பணிப்பாளர் - கண்காணிப்பாளர்), பிரதிப் பணிப்பாளர் : பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே,(பெயர் குறிப்பிடப்பட்டது) செயலாளர், உயர் கல்வி அமைச்சு : திரு.பியதாச ரணேபுர (மார்ச் வரை) மற்றும் திரு.எம்.தேவசுரேந்திர (மே மாதம் முதல்), திரு.ருவன் கேரகல (ஜுன் முதல்), கணக்காய்வாளரின் பிரதிநிதிகள் : திருமதி ஆர்.பீ.எஸ். பத்மினி (ஒக். வரை), ஆர்.எம்.பீ.ஏ.ஜனக்க (நவம்பர் முதல்), உள்ளகக் கணக்காய்வாளர் / பல்.மானி.ஆ.குழு: திரு.ஜனக்க போகமுவ, உள்ளகக் கணக்காய்வாளர் (கொழும்பு பல்.கழ.) திரு. கே.ஈ.டப்ளியூ.ஜயசிரி, முகவர்/ E&Y கணக்காய்வாளர்கள் : திருமதி ஜீ.டீ.ஏ.வீரசூரிய.

**கல்வி நிர்வாக சபை**

இந்த வருடத்தில் இச் சபை 13 கூட்டங்களை நடாத்தியுள்ளது. இச் சபையின் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கற்கைப் பிரிவுத் தலைவர்கள் (CIS/CMT/ISE); நிலையங்களின் ஒருங்கிணைப்பாளர்கள்(ADMTC/CSC/EDC/eLC/PDC); **பெயர் குறிப்பிடப்பட்டவர் (விஞ்ஞான பீடம்):**பேராசிரியர் ஆர்.டீ.விஜேசேக்கர, தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில் பிரதிநிதிகள்: இல்லை, சிரேஷ்ட கற்கைப் பிரிவு ஆளணி அங்கத்தவர்கள் (கொ.பல்.கணனி கற்கை நிறுவனம்), இரண்டு கற்பித்தல் ஆளணி அங்கத்தவர்கள் : எம்.பீ.எம்.கே.சில்வா, கலாநிதி ரீ.ஏ.வீரசிங்க (ஜுலை முதல்), கலாநிதி எச்.ஈ.பீ.எச்.பீ.ஏக்கநாயக்க(ஏப்ரல் முதல்), திருமதி எம்.பிரேமசந்திர(செப். முதல்), கற்கைச் சபை (உள்வாரி இளமாணிப் பட்டம்) : திரு.எம்.ஐ.ஈ.விக்கிரமசிங்க (நவ. முதல்).

**கற்கைகள் சபை**

உள்வாரி இளமாணிப் பட்டம் (IUD) , ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டம் (RHD) , மற்றும் வெளிவாரி மற்றும் தொடர் கல்வித் திட்டம்(EEP) எனும் பெயரில் 03 கற்கைகள் சபைகள் காணப்படுகின்றன. அந்தச் சபைகள் உள்ளக இளமாணிப் பட்டம், ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டம் மற்றும் வெளிவாரி மற்றும் தொடர் கல்வித் திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த 03 சபைகளும் இந்த வருடத்தில் முறையே 11, 12 மற்றும் 12 கூட்டங்களை நடாத்தியுள்ளன.

### கல்வி நடவடிக்கைகள்

### நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மாணவர்கள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கைகள் நிறுவனம் விரிவான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை பல்வேறு மட்டங்களில் நடாத்தி வருகின்றது. அட்டவணை 1 இன் ஊடாக நடாத்தப்படும் பாடநெறிகளுடன் (நிகழ்ச்சித் திட்டங்கள்) தொடர்பான மாணவர்கள் மற்றும் ஆளணி சம்பந்தமான தகவல்கள் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: நடாத்தப்படும் பாடநெறி வகைகள்**

| பாடநெறி | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த கல்விசார் ஆளணி | மொத்த கல்விசாரா ஆளணி |
|---|---|---|---|
| இளமாணி மற்றும் பட்டப்பின் கற்கைகள் | 1,222 | 64 | 60 |
| ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயற் திட்டங்கள் | 45 | 35 | 25 |
| தொடர் கற்கை பாடநெறிகள் | 339 | 1 | 36 |
| வெளிவாரிப் பட்டம் | 8,235 | 48 | 39 |
| இணைய வழிக் கற்கை | 10,995 | 4 | 9 |
| ஏனையவை - விஞ்ஞான பீடம் | 997 | 15 | 2 |

### இளமாணிப் பட்டக் கல்வி

இளமாணிப் பட்டத்தைப் கற்கும் மாணவர்களுக்கு முதன் முதலில் விஞ்ஞான பீடத்தின் ஒரு பிரிவாக 1967 ஆம் ஆண்டில் கணனி பற்றிய கல்வி அறிமுகஞ் செய்யப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் இச் சந்தர்ப்பத்தை விஞ்ஞான பீட மாணவர்கள் 997 பேருக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றது. 1990 ஆம் ஆண்டிலேயே கணனித் துறைப் பட்டப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. மொத்தமாக நோக்கும்போது 1767 இளமாணிப் பட்ட மாணவர்கள் பொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தில் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கணனிக் கற்கை நிறுவனம் தற்போது 468 மாணவர்களுக்கு கணனி விஞ்ஞானப் பட்டத்தையும் (CS) 21 மாணவர்களுக்கு மென்பொருள் பொறியியல் (Software Engineering) பட்டத்தையும் 281 மாணவர்களுக்கு தகவல் முறைமை பட்டத்தையும் (IS/ICT)வழங்குகின்றது.

**உள்வாரிப் பட்டம்**

பட்டப் பாடநெறிகளின் உத்தேச மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அங்கீகரித்ததுடன் அது 2012/2013 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கீழ் குறிப்பிடப்படும் பட்டங்களை வழங்குவதற்காக கணனி விஞ்ஞானப் பட்டப் படிப்பு மறுசீரமைப்புக்குட்படுத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்பம், தகவல் முறைமை மற்றும் கணனி விஞ்ஞானத் தொழில் நிபுணர்களுக்கு சர்வதேச ரீதியாக நிலவும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக எதிர்பார்க்கப்படும் பட்டத்திற்கான தரங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் IEEE/ACM பாடத் திட்டத்துடன் இயைந்து செல்வதற்கும் ஏற்ற வகையில் உத்தேச பாடத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

i. 03 வருட கால கணனி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc in CS)

ii. 04 வருட கால கணனி விஞ்ஞானம் பற்றிய விசேட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (B.Sc Hons. in CS)

iii. 04 வருட கால மென்பொருள் பொறியியல் (Software Engineering) பற்றிய விசேட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (BSc Hons in SE)

வர்த்தகத் துறையின் தேவைகள் மற்றும் தொழில்நுட்பத் தீர்வு என்பவற்றிற்கிடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக நவீன தகவல் தொழில்நுட்ப தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறி (BCIT) தகவல் முறைமை பட்டம் என மறுசீரமைக்கப்பட்டது. தற்போது பழைய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறியை 4 ஆவது வருட மாணவர்கள் மாத்திரமே கற்கின்றனர். தகவல் முறைமை பட்டத்தை நவீன வகையிலான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியானது தொடர்பாடல், குழு வேலை போன்ற மென்மையான ஆற்றல்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றது.

இந்தப் பாடநெறியின் ஊடாக வழங்கப்படும் பட்டங்கள் பின்வருமாறு,

i. 03 வருட கால தகவல் முறைமை பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் ( BSc in IS)

ii. 04 வருட கால தகவல் முறைமை பற்றிய விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ( BSc Hons in IS)

நிலவிய 3 வருடங்களில் மற்றும் 3+1 (4 வருடங்களில்) வெளியாகுதல் இற்குப் பதிலாக 2+1 (3 வருடங்கள் ) மற்றும் 2+2 (4 வருடங்கள்) வெளியேறத்தக்க பட்டப் பாடநெறிகளாக மாற்றியமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கணனி விஞ்ஞான பாடத் திட்டத்திற்குரிய பாடநெறியானது தற்போது நிலவும் 3 வருட மற்றும் 4 வருட கணனி விஞ்ஞானப் பாடநெறிக்கு மேலதிகமாக 4 வருட மென்பொருள் பொறியியல் (Software Engineering )பற்றியவிசேட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தைக் கொண்டுள்ளது. முதல் 02 வருடங்களில் மாணவர்கள் புதிய பாடத் திட்டத்தை பயிலும்போதே மூன்றாவது வருட ஆரம்பத்துடன் மென்பொருள் பொறியியல் (Software Engineering )விஞ்ஞானம் மற்றும் கணனி விஞ்ஞானப் பாடநெறிக்காக முதலாவது மாணவர் குழு தெரிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், நான்காவது வருட மாணவர்கள் முன்னர் நிலவிய பட்டப் பாடநெறியை மாற்றங்களின்றி பயின்றனர். கணனி விஞ்ஞானப் பட்டத்திற்காக உயர் தர பௌதீகப் பாடத்துறை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தகவல் முறைமை பட்டம் சகல பாடத் துறைகளுக்கும் திறந்து விடப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட பாடத் திட்டமானது தொடர்பாடல், குழு வேலை போன்ற மென்மையான ஆற்றல்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது. எந்தவொரு உயர் தர பாடத் துறைக்கும் திறந்த தகவல் முறைமை பாடநெறிக்கு தகைமை பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக சாத்தியம் பற்றிய பரீட்சை நடாத்தப்பட்டது. அடுத்த கல்வி ஆண்டிற்காக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான சாத்தியம் பற்றிய பரீட்சை ஜுலை மாதம் 14 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், 1789 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்காக தோற்றி அதில் 502 பேர் தகைமை பெற்றனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் 2014/2015 ஆண்டில் இலங்கையின் சில பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டப் பாடநெறிக்காக புதிய நுழைவு ஏடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. முன்னைய வருடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 275 மாணவர்களின் எண்ணிக்கை மாறாமல் பேணி வரப்பட்டுள்ளது. (கணனி விஞ்ஞானம் 175, தகவல் முறைமை 100)

**பதிவு செய்யப்படல்**

2014/2014 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதன் கீழ் கணனி விஞ்ஞானப் பட்டத்தைப் பயிலுவதற்காக 163 மாணவர்களும் தகவல் முறைமை பட்டத்தைப் பயிலுவதற்காக 93 மாணவர்களும் கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 757 ஆக நிலவியது. இந்த எண்ணிக்கை பற்றிய விபரம் அட்டவணை 2 இன் ஊடாக காட்டப்பட்டுள்ளது. அநேகமான மாணவர்கள் மூன்றாம் ஆண்டில் தொழில்நுட்ப பயிற்சியை நிறைவு செய்வதற்கும் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் ஊடாக நன்மை பயக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களை பணியில் அமர்த்துவதனை அவதானிக்க முடியுமாக இருந்தது. நான்காம் ஆண்டிற்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கை பெப்ரவரி 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன், கல்வியாண்டிற்கான கற்கை நடவடிக்கைகள் பெப்ரவரி 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. புதிய மாணவர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு பெப்ரவரி 06 ஆம் திகதி நடைபெற்றது.

**வெளிவாரி ஆளணி**

சகல கல்விசார் மற்றும் கல்விசார் உதவி ஆளணி உள்வாரி இளமாணிப் பட்டப் பாடநெறியை நடைமுறைப்படுத்தும்போது பங்களிப்பை வழங்கின. வெளிவாரியான ஒத்துழைப்பு தேவைப்படும் அநேகமான பாடநெறிகள் தகவல் தொழில்நுட்பத்துறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 09 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் முறைமை பட்டப் பாடநெறிகள் மற்றும் ஒரு கணனி விஞ்ஞானப் பாடநெறியை நடாத்துவதற்காக 11 வருகை விரிவுரையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அட்டவணை 2 : முதலாவது உள்வாரி பட்டப் பாடநெறிகள்

| பட்டப் பாடநெறி | 2014 ஆட்சேர்ப்பு | 1ஆம் ஆண்டு மாணவர்கள் | 2ஆம் ஆண்டு மாணவர்கள் | 3ஆம் ஆண்டு மாணவர்கள் | 4ஆம் ஆண்டு மாணவர்கள் | மொத்தம் | பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணனி விஞ்ஞானப் பட்டம் | - | - | - | 154 | - | 154 | 103 |
| கணனி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் | 175 | 143 | 149 | - | 40 | 332 | 39 |
| தகவல் முறைமை பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் | 100 | 69 | 101 | - | - | 170 | - |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் | - | - | - | - | 23 | 23 | 20 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய பட்டம் | - | - | - | 78 | - | 78 | 53 |
| **கொழு..பல்.கணனி கற்கை நிறுவனத்தின் இளமாணிப் பட்ட அபேட்சகர்கள்** | **275** | **212** | **250** | **232** | **63** | **757** | **215** |
| விஞ்ஞான பீடத்தின் விஞ்ஞானமாணி | - | 553 | 363 | 45 | 36 | 997 | - |
| **உள்வாரி இளமாணிப் பட்ட அபேட்சகர்கள்** | **275** | **765** | **613** | **277** | **99** | **1754** | **215** |

சகல பாடநெறிகளும் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டது.

**தொழில்நுட்பப் பயிற்சிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல்**

தொழில் அபிவிருத்தி நிலையம் (PDC) தகவல் தொழில்நுட்ப கைத்தொழிலுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வருவதுடன், கைத்தொழில் பங்குடமையுடன் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தி அதனூடாக இளமாணிப் பட்டதாரிகளின் தரத்தை உயர்த்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் தொழில் அபிவிருத்தி நிலையம் 230 இளமாணிப் பட்ட அபேட்சகர்களை அவர்களது 06 மாத காலப் பயிற்சிக்காக கணனிக் கற்கை நிறுவனத்தின் 08 செயற் திட்டங்கள் உட்பட 73 நிறுவனங்களுடன் இணைத்துக் கொண்டது. ஆண்டின் பிற் பகுதியல் 247 மாணவர்களைக் கொண்ட அடுத்த குழுவை கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் 13 செயற் திட்டங்கள் உட்பட 81 நிறுவனங்களுடன் இணைத்துக் கொண்டது. இந்த மாணவர்கள் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமது பயிற்சியை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றனர். தொழில் அபிவிருத்தி நிலையம் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தொழில் வல்லுநர்கள் என்ற வகையில் தாம் மேற்கொள்ள வேண்டிய பணி பற்றி பட்டத்தைப் பெற இருப்பவர்களை அறிவுறுத்துவதற்காக தன்னார்வ அடிப்படையில் வழங்கும் அழைப்பு விரிவுரைகளில் கலந்துகொள்வதற்காக கம்பனிகளை ஏற்பாடு செய்தன. தொழில்நுட்பப் பயிற்சி தவிர பட்டத்தைப் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் தவிர நேர்முகப் பரீட்சைகள், தொழில் திறன் விருத்தி போன்றவற்றை தொழில் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்தது.

**விடுதி வசதிகள்**

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பின்பற்றப்படும் கொள்கைக்கமைய கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் இவ் வருடத்திலும் விடுதி வசதிகள் மிகவும் தேவைப்படும் முதலாம் ஆண்டைப் போன்றே 3 ஆவது மற்றும் 4 ஆவது கல்வி ஆண்டுகளைச் சேர்ந்த இளமாணிப் பட்ட மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கியது. அதற்காக கீழ் குறிப்பிடப்படும் விடுதி வசதிகள் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது. பத்தரமுல்லை மாணவர் விடுதியில் 27 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் ( 1 ஆம் வருடம் 10 பேருக்கு, 3 ஆம் வருடம் 17 பேருக்கு, காப்பாளர் - கலாநிதி கே.எல்.ஜயரத்ன, துணைக் காப்பாளர் - திரு.எம்.ஐ.ஈ.விக்கிரமசிங்க) கொஹுவல இல் அமைந்துள்ள பெண் பிள்ளைகளுக்கான விடுதியில் 33 மாணவிகளுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. (முதலாம் வருடம் - 18, மூன்றாம் வருடம் - 13, நான்காம் வருடம் - 02, துணை துணைக் காப்பாளர் - திருமதி ஜே.எச்.கே.தியுமினி)

**உணவகம்**

பல்கலைக்கழக வளவில் பல சிற்றுண்டிச்சாலைகள் இயங்கினாலும் மீளாய்வு ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம் விசேடமாக தமது மாணவர்களுக்காக தனியான சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்தியது. கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய சிற்றுண்டிச்சாலையின் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. புதிய சிற்றுண்டிச்சாலையில் 120 மாணவர்களுக்கு இடவசதி காணப்படுவதுடன், உணவு பரிமாறுவதற்கு, தொலைக் காட்சி பார்ப்பதற்கு மற்றும் இணையத்தளப் பயன்பாட்டிற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. புதிய சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கு முன்னர் நிர்வாக நிலையத்தின் (College House)சிற்றுண்டிச்சாலையை நடாத்தும் நபர்களிடம் ஒப்படைத்தாலும் இணங்கிய சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர்கள் தவறியமையினால் கலைப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்தும் நபர்களுக்கு அது ஒப்படைக்கப்பட்டது. விசேடமாக நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட குறைந்தளவு நிதி காரணமாக சிற்றுண்டிச்சாலை தளபாடங்களை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**உள வள ஆலோசனை**

கலாநிதி திருமதி எஸ்.எம்.கே.டீ. அருணதிலக்க, கலாநிதி ஏ.ஆர்.வீரசிங்க (ஒக்டோபர் 31 வரை), கலாநிதி திருமதி ரீ.ஏ.வீரசிங்க, கலாநிதி ரீ.எம்.எச்.ஏ.யூசுப் (ஒக்டோபர் வரை), திரு. எச்.ஈ.எம்.எச்.பீ.ஏக்கநாயக்க (நவம்பர் முதல்), திரு.ஜீ.பீ.செனவிரத்ன(நவம்பர் முதல்),கலாநிதி ரீ.ஸ்ரீதரன் (நவம்பர் முதல்) போன்ற நான்கு மாணவ ஆலோசகர்களின் சேவை (பின்னர் 05 வரை அதிகரிக்கப்பட்டது) சகல மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும், உள வள ஆலோசனை தேவைப்படும் மாணவர்களுக்கு தொழில்சார் நிபுணத்துவ ஆலோசகர் ஒருவரின் சேவை வாரத்தில் 03 மணித்தியாலங்களுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. பொதுவாக சுமார் 05 மாணவர்கள் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காகவருவதுடன், பரீட்சை நடைபெறும் காலம் போன்ற சில குறிப்பிட்ட காலங்களில் 10 - 15 மாணவர்கள் ஆலோசனை பெற்றுக் கொள்கின்றனர்.

**இளமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்பவர்களுக்கான நிதயுதவி**

மகாபொல புலமைப் பரிசில், மாணவர் உதவித் தொகை, கைத்தொழில் நிறுவனங்களின் புலமைப் பரிசில் மற்றும் தனிப்பட்ட புலமைப் பரிசில்கள் போன்ற நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

**மகாபொல புலமைப் பரிசில்**

வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சின் நிதியுதவி ஊடாக அனுசரனை வழங்கப்படும் மகாபொல புலமைப் பரிசில் 308 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. திறமை மற்றும் சாதாரண புலமைப் பரிசில்களின் பெறுமதி முறையே ரூபா 2,600/- மற்றும் ரூபா 2,550/-ஆகும்.மே மாதம் முதல் இதன் பெறுமதி ரூபா 5,000/- மற்றும்ரூபா 5,050/-என அதிகரிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் உதவித் தொகை**

மாணவர் உதவித் தொகைக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமான பல்.மானி.ஆ.குழுச் சுற்றறிக்கைக்கமைய மாணவர் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 145 மாணவர்களுக்காக இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்கான உதவித் தொகை பெறுபவர்கள் பற்றிய விபரம் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முழு உதவித் தொகை மற்றும் பகுதி உதவித் தொகையின் பெறுமதி முறையே ரூபா 2,000/-மற்றும் ரூபா 1,900/- ஆகும். மே மாதத்தில் இந்தப் பெறுமதி ரூபா 2,400/- மற்றும் 2,500/- ரூபா வரையும் ஒக்டோபர் மாதம் முதல் இந்தப் பெறுமதிகள் முறையே ரூபா 3,900/- மற்றும் ரூபா 4,000/- வரையும் அதிகரிக்கப்பட்டது.

**விடுதி வசதிகள்**

மூன்றாம் ஆண்டு மாணவர்கள் வருடத்தின் அரைவாசி கைத்தொழில் பயிற்சிக்கு இணைக்கப்படுவதனால் விடுதி வசதிகள் பொதுவாக முதலாம் வருட மாணவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. அங்கு வெற்றிடம் நிலவியமையினால் மூன்றாவது வருட மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

**மகாபொல புலமைப் பரிசில், மாணவர் உதவித் தொகை மற்றும் விடுதிகள் வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் கீழே அட்டவணையின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.**

| கற்கை ஆண்டு | கற்கும் வருடம் | மகாபொல பயனாளிகள் (CS மற்றும் IS / ICT) | மாணவர் உதவித் தொகை பெறுபவர்கள் (CS மற்றும் IS / ICT) | விடுதி வசதிகள் (ஆண் மற்றும் பெண்) |
|---|---|---|---|---|
| 2013/14 | 1ஆம் வருடம் | 90 (63+27) (35%) | 87 (55+32) (34%) | 28 (10+18) (11%) |
| 2012/13 | 2ஆம் வருடம் | 80 (69+11) (39%) | 14 ( 9+5) (7%) | - |
| 2011/12 | 3ஆம் வருடம் | 116 (70+46) (47%) | 40 ( 15+25) (16%) | 30 (17+13) (12%) |
| 2010/11 | 4ஆம் வருடம் | 22 (16+6) (37%) | 4 (2+2) (7%) | 02 (0+2) (03%) |

**கைத்தொழில் நிறுவனங்களின் புலமைப் பரிசில்**

மாணவர் நலனோம்புகை மற்றும் அனர்த்த நிதியம் - 16 (மாதாந்தம் ரூபா 2,500/- வீதம் 10 மாதங்களுக்கு); IFS R&D (IFS) - 08 (மாதாந்தம் ரூபா 2,500/- வீதம் 12 மாதங்களுக்கு); மற்றும் MIND -2 (மாதாந்தம் ரூபா 2,000/- வீதம் 12 மாதங்கள்) என உள்வாரியான நிதி மூலம் மற்றும் வெளிவாரியான இரண்டு அமைப்புக்கள் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு அனுசரணை வழங்கின.

**"Shorea Robusta" புலமைப் பரிசில்**

முன்னர் நிலவிய கணனி விஞ்ஞான விசேட பட்டப் பாடநெறியின் பழைய மாணவர்களினால் 2007 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்த "Shorea Robusta" புலமைப் பரிசில் நான்காம் ஆண்டின் இளமாணிப் பட்ட அபேட்சகர்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் ஊடாக 02 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், புலமைப் பரிசிலின் பெறுமதி மாதாந்தம் ரூபா 2,500/-ஆக இருந்ததுடன் கல்வியாண்டிற்கான மாதாந்த தவணைகளின் எண்ணிக்கை 10 ஆகும். தெரிவானது மாணவர்களின் செயற்திறன் மற்றும் நிதித் தேவைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் மாணவர் அமைப்பு**

2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனக் கட்டளைச் சட்டத்தின் உப உறுப்புரை 25 மற்றும் 26 இற்கமைய 2014/15 ஆண்டிற்கான மாணவர் அமைப்புக்களுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றதுடன் நிர்வாக சபை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது. தலைவர் : எஸ்.எல்.ஆர் த சில்வா, உப தலைவர் : டப்.ஏ.ஆர்.ஆர்.சோமவீர, செயலாளர்: டீ.ரீ.ஏ.எச்.என்.திசாநாயக்க, கனிஷ்ட பொருளாளர் : டப்.பீ.எம்.பிரியன்ஜ, ஆசிரியர் : ஆர்.சீ.பீ.ராஜபக்ஷ, நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் : எஸ்.எஸ்.பீ.விஜேரத்ன, எஸ்.டீ.எல்.எச்.சந்தநாயக்க, எஸ்.அகிலேந்திரன், ஏ.ஏ.எப்.எம்.பஸ்லி, சிரேஷ்ட பொருளாளர் : எம்.ஜீ.என்.ஏ.எஸ்.பெர்னாந்து.

**மாணவர் செயற்பாடுகள்**

மாணவர் அமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மாணவர் செயற்பாடுகள் பிரதானமாக கலாசார மற்றும் பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டவைகளாக இருந்தன. ஏப்ரல் மாதம் மாணவர்களினால் விளையாட்டுப் போட்டி மற்றும் புத்தாண்டு விழா, மே 03 இல் வெசாக் கூடுகள் அமைத்தல், மே 05 இல் தான சாலை, மே 08 பொசான் கீதங்கள், ஜுன் 03 பேராசிரியர் சமரநாயக்கவுக்காக பௌத்த மத போதனை, ஜுன் 05 வெளியேறிச் செல்லல் நிகழ்வு, செப். 19 புதிய மாணவர்களுக்கான கிரிக்கட் போட்டி மற்றும் புதிய மாணவர்களை வரவேற்றல், செப்டெம்பர் 26 இரத்த தான முகாம், ஒக்.01 புற்றுநோய் வைத்தியசாலையில் பிரத் ஓதும் நிகழ்வு, மார்ச் 20 மற்றும் நவம்பர் 04 இல் "வாணி விழா" ஒக்.22 நத்தார் மரம் மற்றும் பக்தி கீதமிசைத்தல், டிச.30 இல் நடாத்தப்பட்டதுடன், கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் மாணவர்கள் க.பொ.த (சா.த) மற்றும் (உ.த) மாணவர்களுக்கு உதவி புரிவதற்காக பாடசாலைகள் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தில் சில செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. பணிப்பாளர் உட்பட ஆளணியினரின் பங்கேற்புடன் மாத்தறையில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

**மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள்**

மாணவர்கள்"**National Best Quality ICT Awards (NBQSA)** மூன்றாம் நிலைக்கான (தொழில்நுட்பம்)NBQSA வெண்கலப் பதக்கத்தை வெற்றிகொண்டனர். டப்ளியு.கே.ஏ.எஸ்.விஜேசிங்க கண் நோய் வைத்திய நிபுணர்களுக்கான நீரிழிவு நோய் காரணமாக கண்ணில் ஏற்படும் நோய் நிலைமைக்காக தன்னியக்கப் பரிசோதனையான " Autogenous Diabetic Retinopathy Censor for Ophthalmologists –" AKSHI" இற்கு மூன்றாம் நிலைக்கான (தொழில்நுட்பம்)NBQSA வெண்கலப் பதக்கத்தையும், "நெற் பயிர்ச் செய்கையின்போது நைதரசன் பசளையை பயன்மிக்க வகையில் பயன்படுத்தல் - Effective Utilization of Nitrogen Fertilizer in Paddy Cultivation" இற்காக மூன்றாம் நிலைக்கான (வர்த்தகம்) பதக்கத்தையும் வெற்றி கொண்டனர்.டப்ளியு.கே.ஏ.எஸ்.விஜேசிங்கவின் "Autogenous Diabetic Retinopathy Censor for Ophthalmologists –" AKSHI" ஆசிய பசுபிக் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான விருது வழங்கும் வைபவத்தில் திறனுக்கான விருதைப் பெற்றுக் கொண்டது.

"**Imagine Cup**" என்பது பல்கலைக்கழக மாணவர்களிடையே பல்வேறு பிரிவுகளின் கீழ் வருடாந்தம் நடாத்தப்படும் போட்டியாகும். கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் மாணவர்கள் விளையாட்டுப் பிரிவின் கீழ் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். " the OOPS Creators" "IEEE Extreme 9.0" உலகளாவிய நிகழ்ச்சித் திட்ட மயப்படுத்தல் போட்டி நிறுவனத்தின் 200 இற்கும் மேற்பட்டவர்களின் (81 ஆவது குழு) பங்கேற்புடன் ஒக். 24 ஆம் திகதி நாள் பூராவும் நடைபெற்றது.Extreme போட்டி வரலாறு பூராவும் பெற்றுக்கொள்ள முடியுமான சிறந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் உயர் குழுவினால் முடியுமாகியது. எமது உயர் குழு" Hal9000" இலங்கையின் ஆறாவது இடத்திற்கும் உலகில் 145 ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டது. உலகில் முதல் 200 இற்குள் வருவதற்கு எமது 03 குழுக்களுக்கு முடியுமாகியது.

மாணவர்களால்“Reid Cyber Wars” எனும் கணனி விளையாட்டுப் போட்டி ஜுன் 17 ஆம் திகதி நடாத்தப்பட்டது. செப்.05 மற்றும் 06 ஆம் திகதிகளில் 24 மணி நேர “hackathon” போட்டியொன்றை மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**விளையாட்டு**

நிறுவனத்தில் பயிலும் கீழ் குறிப்பிடப்படும் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுத் துறைகளில் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டனர் : கரம் (பெண்கள்) - ரீ.ஏ.கே.லோச்சனா மற்றும் தய்கொண்டோ (ஆண்கள்) - டப்.ஏ.எம்.எஸ்.வீரசூரிய.

நிறுவனத்தில் பயிலும் கீழ் குறிப்பிடப்படும் மாணவர்கள் 2015 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுக்களில் பதக்கங்களை வெற்றி கொண்டனர் : ஜீ.எச்.சீ.கருணாரத்ன - பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகளம் மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் திறமைக்கான விருது மற்றும் எஸ்.எஸ்.விதானகே - பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நீச்சல் போட்டிகளில் சிறந்த செயற் திறனுக்கான பேராசிரியர் திலக் ஹெட்டிஆரச்சி சவால் கிண்ணம்.

2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தரில் பயிலும் கீழ் குறிப்பிடப்படும் 32 மாணவர்கள் பல்கலைக்கழக வர்ணத்தை வெற்றி கொண்டனர். * ஊடாக மீண்டும் வெற்றி பெற்ற மாணவர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

**பெட்மின்டன்: (ஆ) -** பீ.எம்.ரணதுங்க **(பெ) *ரீ.எஸ்.தஹநாயக்க கெரம்: (ஆ)** பீ.பீ.பீ.பிரசங்க, பீ.வை.குணரத்ன **(பெ)** - டப்.டீ.எம்.வீரகோன், *எம்.பீ.பீ.எஸ்.விஜேரத்ன, *ரீ.ஏ.கே.லோச்சனா. **செஸ்: (ஆ)** -*எம்.டீ.வை.பெரேரா. **எல்லே:(ஆ)-**யூ.எஸ்.ஏ.விஜேசேக்கர * ஜீ.ஏ.மதுசங்க **(பெ)** கே.டீ.யூ.எம்.பிரேமதிலக்க, எச்.ஏ.கே.நதீகுமாரி. ஆர்.எல்.கமகே, கே.கே.எம்.பிரமோதி. **கால்பந்து:** கே.எம்.ஹசீம், ஐ.எஸ்.வீரக்கொடி, எம்.என்.எம்.நசாத், *ஜீ.டப்.எஸ்.சீ.கிங்தொட்ட. **ஹொக்கி**: எம்.ஜீ.ரீ.பியுமன்த்த **(பெ)** - டீ.எம்.வீரசிங்க, *டப்.சீ.ஈ.விக்கிரமசிங்க. **கராட்டே: (ஆ)** கே.டீ.பீ.சமரவீர,ஆர்.எம்.எஸ்.ரீ.சிரிவர்தன, *ஐ.ஏ.டீ.கே.சீ.டப்.குணரத்ன. **நீச்சல்: (ஆ)** எஸ்.எஸ்.வித்தானகே, ஜீ.எச்.சீ.ஈ.கருணாரத்ன, ஜே.எம்.ஐ.டீ.ஜயசுந்தர. **டய்கொண்டோ: (ஆ)** - * டப்.ஏ.எம்.எஸ்.வீரசூரிய. **டெனிஸ்: (ஆ)** - ஈ.கே. த சில்வா, **(பெ)** -ஈ.டப்.எம்.யூ.ஐ.பிட்டவல,கே.எச்.எஸ்.ரூபசிங்க. **வொலிபோல் (ஆ)** - *வை.எம்.கே.கே.யாப்பாரத்ன.

**பட்டமளிப்பு விழா**

4 பட்டப் பாடநெறிகளுக்கான 247 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா 2015 ஜுலை 20 ஆம் திகதி நடாத்தப்பட்டது. உயர் தரத்தில் எந்தவொரு பாடத் துறையிலிருந்தும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டப் பாடநெறிகளுக்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (அட்டவணை 3 “அ” மற்றும் “ஆ”) இந்த மாணவர்களின் பாடத் துறைக்கமைய செயற் திறன் அட்டவணை 3 இன ஊடாக காட்டப்பட்டுள்ளது.

நான்காவது மற்றும் மூன்றாவது ஆண்டில் பட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் முறையே 7 மற்றும் 10 மாதங்களின் பின்னர் அமைச்சினால் பட்டமளிப்பு நடாத்தப்படும் கால கட்டத்தில் கணிப்பீடு ஒன்று நடாத்தப்பட்டது.இந்த அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக அந்த கணிப்பீட்டின் அறிக்கை இது வரை கிடைக்கப் பெறவில்லை. ஆதலால் அதனை இந்த அறிக்கையில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

**அட்டவணை 3 : கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தினது மாணவர்களின் செயற் திறன்.**

| ஆட்சேர்ப்பு | முதலாவது தரம் | இரண்டாவது தரம் (மேல்) | இரண்டாவது தரம் (கீழ்) | சித்தியடைந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கணனிப் பட்டம் | 02 | 01 | 17 | 83 | 103 |
| தக.தொ.நு.பட்டம் | - | - | 15 | 38 | 53 |
| கணனி விஞ்ஞானமாணி பட்டம் | 10 | 14 | 10 | 05 | 39 |
| தக.தொ.நு.விஞ்ஞானமாணி பட்டம் | 04 | 12 | 03 | 01 | 20 |
| மொத்தம் | 16 | 27 | 45 | 126 | 215 |

**அட்டவணை 3 "அ": தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப் பாடநெறி மாணவர்களின் செயற்திறன்**

| ஆட்சேர்ப்பு | முதலாவது தரம் | இரண்டாவது தரம் (மேல்) | இரண்டாவது தரம் (கீழ்) | சித்தியடைந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கணிதம் | - | - | 08 | 16 | 24 |
| உயிரியல் விஞ்ஞானம் | - | - | 03 | 03 | 06 |
| வர்த்தகம் | - | - | 04 | 14 | 18 |
| கலை | - | - | - | 05 | 05 |
| தக.தொ.நு.பட்டம் | - | - | 15 | 38 | 53 |

**அட்டவணை 3 "ஆ": தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி பற்றிய பட்டப் பாடநெறி மாணவர்களின் செயற்திறன்**

| ஆட்சேர்ப்பு | முதலாவது தரம் | இரண்டாவது தரம் (மேல்) | இரண்டாவது தரம் (கீழ்) | சித்தியடைந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கணிதம் | 0 | 10 | 0 | 0 | 14 |
| உயிரியல் விஞ்ஞானம் | 3 | 1 | 0 | 0 | 04 |
| வர்த்தகம் | 8 | 1 | 0 | 0 | 09 |
| கலை | 0 | 0 | 0 | 0 | 00 |
| தக.தொ.நு.விஞ்ஞானமாணி பட்டம் | 11 | 12 | 0 | 0 | 23 |

**இளமாணிப் பட்டத்திற்கான பட்டமளிப்பு விழா**

இளமாணிப் பட்டத்திற்கான பட்டமளிப்பு விழா 2014 ஜுன் 10 ஆம் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 2013 ஆம் அண்டில் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் சிறந்த மாணவனுக்கு வழங்கப்படும் பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க விருது எம்.ஜீ.டீ.கே.பெர்னாந்து எனும் மாணவிக்கு வழங்கப்பட்டது. ஏனைய பட்டமளிப்பு பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

**அட்டவணை 3 "இ": கணனி விஞ்ஞானம் : இளமாணிப் பட்டத்திற்கான பட்டமளிப்பு விழா - 2014**

| **விருதின் பெயர்** | **விருது பெற்றவரின் பெயர்** |
|---|---|
| கணனி விஞ்ஞானத்திற்கான பேராசிரியர் மொஹான் முனசிங்க விருது -2013 | சீ.பன்கஜன் |
| இறுதியாண்டின் சிறந்த கணனி விஞ்ஞான திட்டத்திற்கான சின்டெக் விருது-2013 | எம்.ஜே.எம்.சாசன் |
| தொழில்நுட்ப பயிற்சியின் சிறப்பான செயற் திறனுக்கான டேவிட் பீரிஸ் தங்கப் பதக்கம்(கணனி விஞ்ஞானம்) - 2012 | டப்.எல்.ரணவீர<br>எம்.ஜே.எம்.சாசன்<br>எம்.ஏ.எம்.வீரசிங்க<br>டப்.டீ.என்.வை.குணதிலக்க |
| மூன்றாண்டு பட்டப் பாட நெறியின் சிறப்பான செயற் திறனுக்கான வதுர்ஸா கற்கை சிறப்பு விருது(கணனி விஞ்ஞானம்) -2013 | ரீ.எம்.கம்லத் |

**அட்டவணை 3 "ஈ": தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - இளமாணிப் பட்டத்திற்கான பட்டமளிப்பு விழா - 2014**

| **விருதின் பெயர்** | **விருது பெற்றவரின் பெயர்** |
|---|---|
| நான்காண்டு பட்டப் பாடநெறிக்கான (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) சிறப்பான செயற் திறனுக்கானIFS கற்கை சிறந்த விருது-2013 | எச்.டீ.எஸ்.ரீ.விஜேரத்ன |
| சிறந்த இறுதியாண்டு செயற் திட்டத்திற்கான சம்பத் வங்கி விருது-2013 | எச்.டீ.எஸ்.ரீ.விஜேரத்ன<br>ஜீ.பீ.ஜ. த சில்வா |
| தொழில்நுடம்ப பயிற்சியின் சிறந்த செயற் திறனுக்கான டேவிட் பீரிஸ் தங்கப் பதக்கம் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) -2012 | எம்.ஏ.ஆர்.ஜல்தீன் |
| தொழில்நுடம்ப பயிற்சியின் சிறந்த செயற் திறனுக்கான டேவிட் பீரிஸ் தங்கப் பதக்கம் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) -2013 | ஆர்பீ.எச்.விதானகே |
| மூன்றாண்டு பட்டப் பாடநெறிக்கான (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) சிறப்பான செயற் திறனுக்கான மோட்டரோலா கற்கை சிறந்த விருது-2013 | ரீ.ஜீ.ஈ.பெரேரா |

**பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள்**

கணனி சம்பந்தமாக இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளைக் கொண்ட பட்டதாரிகள் மற்றும் ஏனைய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டப் பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் (பட்டப்பின் கற்கை) பட்டப் பாடநெறியில் இலத்திரணியல்(மின்) வழிக் கற்கைகள் (e-learning) மற்றும் பல்லூடகத் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பட்டப்பின் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பட்டதாரிகளுக்காக தகவல் பாதுகாப்பு சம்பந்தமான முதுமாணிப் பட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறி தகவல் தொழில்நுட்பம், தகவல் தொகுதி கணக்காய்வு மற்றும் தகவல் பாதுகாப்பு போன்ற துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு தொழில் நிபுணத்துவத்தை வழங்கும்.

கணனிக் கற்கை நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும் முதுமாணிப்(பட்டப்பின் கற்கை) பட்டப் பாடநெறியானது இரண்டு வருட கால பகுதி நேர பாடநெறியாக இருப்பதுடன், ஆறு மாதங்களைக் கொண்ட 4 கால அட்டவணையைக் கொண்டுள்ளது. தெரிவு செய்வதற்கான பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை நடாத்தி 2015 / 2016 ஆண்டிற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை இந்த ஆண்டில் நடைபெற்றது. மாணவர்கள் 2016 ஆம் ஆண்டில் பாடநெறியை ஆரம்பிப்பதற்காக பதிவு செய்யப்படுவார்கள்.

பாடநெறிக்காக உள்வாரி மற்றும் வெளிவாரியாக 37 விரிவுரையாளர்கள் பங்களிப்பைச் செலுத்தினர். முதுமாணிப் பட்டப் பாடநெறிக்கான மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 452 ஆகும். (அட்டவணை 4) முதுமாணி (பட்டப் பின் கற்கை) பாடநெறி ஊடாக ஈட்டப்படும் வருமானம் கணிசமான அளவினால் கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைப் பிரிவின் நிதியத்திற்கு பங்களிப்பைச் செலுத்துவதுடன், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு உதவி புரிவதில் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. தகவல் பாதுகாப்பு முதுமாணிப் பட்டம் (MIS) பாடத்திட்டத்திற்கான செயலமர்வு ஏப்ரல் 16 மற்றும் 17 ஆம் திகதிகளிலும் மேலுமொரு செயலமர்வு செப்டெம்பர் 23 மற்றும் 24 ஆம் திகதிகளிலும் நடாத்தப்பட்டது. ஆய்வியல் முதுமாணி/கலாநிதி (முனைவர்)(MPhil /PhD) இன் இடைக்கால சட்க் கேவையை திருத்தியமைப்பதற்கான செயலமர்வொன்றும் நடாத்தப்பட்டது.

2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கு 218 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்காக 53 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 51 பேர்ஆய்வியல் முதுமாணி/கலாநிதி(முனைவர்)(MPhil /PhD)பட்டத்திற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.இந்த ஆண்டில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட அதிகளவு மாணவர்கள் ஆராய்ச்சிக் கற்கைகள் மீது கவனம் செலுத்துவதைக் காண முடியும்.

ஒன்பது மாணவர்கள் ஆய்வியல் முதுமாணி(MPhil) பட்டத்திற்காக பதிவு செய்துள்ளதுடன், ஒருவர் கலாநிதி (PhD)பட்டத்தினை மேற்கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளார்.

**அட்டவணை 4 : பட்டப்பின் (முதுமாணி) பட்டப் பாடநெறி - 2014**

| பாடநெறி | 2014/2015 பதிவு | 1 ஆம் ஆண்டு மாண வர்கள் | 2ஆம் ஆண்டு மாண வர்கள் | 3ஆம் ஆண்டு மாணவர் கள் | 4ஆம் ஆண்டு மாண வர்கள் | மொத் தம் | பட்டங்களை ப் பெற்றுக்கொ ண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணனி விஞ்ஞானம் முதுமாணிப் பட்டம் | 83 | 86 | 81 | 4 | 10 | 181 | 42 |
| தகவல் தொழில்நுட்பம் முதுமாணிப் பட்டம் | 75 | 76 | 100 | 19 | 23 | 218 | 46 |
| தகவல் பாதுகாப்பு விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | 27 | 26 | 27 | - | - | 53 | 12 |
| கணனி விஞ்ஞானம் கலாநிதிப் பட்டம் | - | - | - | - | - | - | 04 |
| தகவல் தொழில்நுட்பம் கலாநிதிப் பட்டம் | - | - | - | - | - | - | 02 |
| தகவல் பாதுகாப்பு கலாநிதிப் பட்டம் | - | - | - | - | - | - | 01 |
| **( Tatal PGD)** | **185** | **188** | **208** | **23** | **33** | **452** | **107** |
| கலாநிதிப் பட்டம் | 01 | 01 | 07 | 01 | - | 09 | 42 |
| ஆய்வியல் முதுமாணி(MPhil) | 08 | 08 | 07 | 08 | 19 | 42 | 46 |
| **மொத்தம்** | **194** | **197** | **222** | **32** | **52** | **503** | **195** |

சகல பாடங்களும் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்பட்டன.

**விருதுகள்**

பட்டப்பின் கற்கை பட்டமளிப்பு விழா டிசம்பர் 1 - 2 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. கணனி விஞ்ஞான முதுமாணிப் பட்டப் பாடநெறியின் சிறந்த மாணவனுக்கான "Kingslake"விருது சீ.பீ.இந்திசூரியவுக்கு வழங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத்திற்கான சிறந்த மாணவனுக்கான "ஐய்க்கா"விருது எச்.எம். கொத்தலாவல எனும் மாணவிக்கு வழங்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்கான விருது வழங்கப்படவில்லை. ஒரு கலாநிதிப் பட்டதாரி உட்பட 04 மாணவர்கள் ஆராய்ச்சிக்கான பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர். 101 பேர் முதுமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்ததுடன் 20 பேர் பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியைத் தேரந்தெடுத்தனர்.

**வெளிவாரிப் பட்டம் மற்றும் தொடர் கல்விப் பாடநெறி**

நடப்பு ஆண்டில் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான பல்கலைக்கழக தேர்ச்சிப் பரீட்சை (UCTIT) மற்றும் ஆங்கில மொழி சம்பந்தமான பல்கலைக்கழகப் பரீட்சைக்காக (UTEL) முறையே 10,995 மற்றும் 5,283 மாணவர்கள் தோற்றினர். நடப்பு ஆண்டில் இணைய வழிக் கற்கைகள் (e-learning) சம்பந்தமான நிலையம் 300 "KPMG மாணவர்களுக்கும், 06 "CAA" மாணவர்களுக்கும் இணைய வழி ஊடாக பரீட்சை நடாத்தியது.

தகவல் தொழில்நுட்பப் பட்டம் (BIT) அதன் ஆரம்பம் முதல் தனியே 33,451 மாணவர்களை ஈர்த்துக்கொண்டுள்ளதுடன் 1661 பட்டதாரிகள், 3353 உயர் டிப்ளோமாதாரிகள் மற்றும் 6852 டிப்ளோமாதாரிகளை உருவாக்கியுள்ளது. 2014/15 கல்வியாண்டில் 1890 புதிய பதிவுகளையும், அதிகளவு பட்டதாரிகளையும் உருவாக்கியது. (அட்டவணை 5). புதிய நுழைவுக்காக ஆட்சேர்ப்பு நடமுைறை ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டாலும் 2015 உயர் தர மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை 2016 கல்வியாண்டில் ஆரம்பிக்கப்படும்.

**அட்டவணை 5 : வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள்- 2014/15**

| பாடநெறி | ஆட்சேர்ப்பு | 1ஆம் வருட மாண வர்கள் | 2ஆம் ஆண்டு மாண வர்கள் | 3ஆம் ஆண்டு மாணவர் கள் | மொத் தம் | பட்டங்களைப் பெற்றுக்கொண்டோ ரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | 1890 | 2621 | 1110 | 344 | 4075 | 334 |
| தகவல் தொழில்நுட்ப உயர் டிப்ளோமா | 690 | 1110 | 406 | 993 | 2509 | 226 |
| தகவல் தொழில்நுட்ப பட்டம் | 346 | 344 | 649 | 658 | 1651 | 262 |
| **மொத்தம்** | **2926** | **4075** | **2165** | **1995** | **8235** | **822** |

அட்டவணை 6 - பதிவு செய்துகொண்ட மாணவர்கள் மற்றும் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன, கடந்த மூன்று வருட காலமாக தகவல் தொழில்நுட்ப பட்ட மாணவர்களின் மாணவர்களின் செயற் திறனை எடுத்துக் காட்டுகின்றது.

பாடத் திட்டம் மாற்றப்படுதல் சம்பந்தமாக சுருக்கமாக தெளிவுபடுத்துவதற்கு மற்றும் கல்வி நிறுவனங்களின் தர மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு BIT நிறுவனம் மே 20 ஆம் திகதி கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. தகவல் தொழில் நுட்ப ( BIT) பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் நடாத்தப்பட்டது. தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்ப(BIT)வெளிவாரிப் பட்டத்திற்கான நிலையம் நவம்பர் மாதம் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது அலுவலகத்தை கணனிக் கற்கை நிறுவனத்தினுள் அமைத்துள்ளதுடன், புதிய இடமொன்று கண்டறியப்படவுள்ளது. தகவல் தொழில்நுட்ப பட்ட (BIT) நிறுவன மேற்பார்வையாளர்கள் BIT பாடநெறிகளின் தரத்தை உயர்த்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

**அட்டவணை 6 : கடந்த 3 ஆண்டினுள் வெளிவாரிப் பட்ட செயற்திறன்**

| வெளிவாரி இளமாணிப் பட்டதாரிகள் | (KPI) | 2012/2013 | 2013/2014 | 2014/2015 |
|---|---|---|---|---|
| தக.தொழி.நு. டிப். - புதிய ஆட்சேர்ப்புக்கள் | 2000 | 2034 | 2379 | 1890 |
| தக.தொழி.நு. டிப். - பதிவு செய்யப்பட்ட | 4000 | 4175 | 4535 | 4045 |
| தக.தொழி.நு. டிப். - டிப்ளோமாதாரி | 600 | 611 | 515 | 334 |
| தக.தொழி.நு. உயர் டிப். - புதிய ஆட்சேர்ப்புக்கள் | 600 | 714 | 721 | 690 |
| தக.தொழி.நு. உயர் டிப். - பதிவு செய்யப்பட்ட | 2000 | 2391 | 2583 | 2509 |
| தக.தொழி.நு. உயர் டிப். - உயர் டிப்ளோமாதாரி | 300 | 305 | 339 | 226 |

| | | | | |
|---|---|---|---|---|
| தக.தொழி.நுட்ப பட்டம் (BIT)ஆட்சேர்ப்புக்கள் | 300 | 312 | 347 | 346 |
| தக.தொழி.நுட்ப பட்டம் (BIT) - பதிவு செய்யப்பட்ட | 1500 | 1416 | 1537 | 1651 |
| தக.தொழி.நுட்ப பட்டம் (BIT) - பட்டதாரிகள் | 200 | 194 | 225 | |

**பட்டமளிப்பு விழா**

2015 செப்டெம்பர் 01 ஆம் திகதி நடைபெற்ற 2014 பட்டமளிப்பு வழாவில் பங்குபற்றிய பட்டதாரிகளின் செயற்திறன் அட்டவணை 7 இன் ஊடாக காட்டப்பட்டுள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவின்போது 225 பட்டதாரிகள் தமக்குரிய பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள். புதிய கல்வியாண்டை ஜனவரி முதல் ஆரம்பித்தல் உட்பட தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறியில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் சம்பந்தமாக சுருக்கமாக தெளிவு படுத்துவதற்காக தொழில்நுட்பக் கற்கை நிறுவனங்களுடன் மே 29 ஆம் திகதி கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

**அட்டவணை 7: 2014 இல் நடைபெற்ற பட்டமளிக்கப்பட்ட பட்டதாரிகள்**

| ஆட்சேர்ப்பு | முதலாம் வகுப்பு சித்தி | இரண்டாம் மேல் நிலை | இரண்டாம் கீழ் நிலை | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பப் பட்டம் | 7 | 9 | 11 | 198 | 225 |

**விருதுகள்**

தகவல் தொழில்நுட்ப வெளிவாரிப் பாடநெறியின் சிறந்த செயற்திறனுக்காக வழங்கப்படும் பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க விருது எம்.எச்.வீ.எம்.பீ.விஜேபால எனும் மாணவிக்கு வழங்கப்பட்டது. சிறந்த தனிநபர் செயற் திட்டத்திற்கான எம்.நசீம் சாதிக், எம்.ஜே.பீ.யூ.சமன்திலக்க ஞாபகார்த்த விருது ஜே.ஏ.ரொமேஷ் ராஜாவுக்கு வழங்கப்பட்டது. 4 ஆறு மாதங்களுக்கான சிறந்த இலத்திரணியல் வழிக் கற்கைக்கான (e-learner) விருது திருமதி ரீ. தனபாலசிங்கம், ஏ.பீ.உமர்தீன், எச்.கே.ஆர்.கே.சேனாதீர, கே.எல்.என்.ரீ.அமரசேக்கர ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

**நிறுவனங்கள்**

அநேகமான நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப பட்டதாரி அபேட்சகர்களுக்கு வகுப்புக்கள் மற்றும் கற்றல் உதவிகளை வழங்கியுள்ளன. இந்தச் செயற்பாடுகளுக்காக 200 நிறுவனங்களைப் பார்க்கிலும் அதிகளவு நிறுவனங்கள் பங்குபற்றியதுடன்,சில கல்வியாண்டுகளில் சுமார் 50 நிறுவனங்கள் மாத்திரம் பங்களிப்புச் செய்துள்ளன. கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம் இதனை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் பாடநெறியின் வெற்றியைக் கருத்திற்கொண்டு அந்த நிறுவனங்களின் பங்களிப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்தினால் அனைத்து ஆண்டுகளிலும் நிறுவனங்களுக்கமைய பரீட்சை பெறுபேறுகளின் பொழிப்பை வெளியிடுவதுடன் அதனூடாக கற்கை நடவடிக்கையை மேற்கொள்பவர்களுக்கு குறிப்பிட்ட நிறுவனங்களை இனங்கண்டு தமது கற்றல் முறைகளை திட்டமிட்டுக்கொள்ள முடியுமாக இருக்கும். கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் மெய்நிகர் கல்வி சூழல்(Virtual Learning Environment) மற்றும் இணைய வழிக் கற்கை/ பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்களின் உதவியுடன் சுயமாகக் கற்பதில் ஈடுபட்டுள்ளனர். 2014/2015 கல்வியாண்டில் 12 மாவட்டங்களின் 31 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் ஐந்து மாணவர்களுக்கும் அதிகமானோருக்கு பயிற்சியை வழங்கின. அவற்றில் 14 நிறுவனங்கள் மூன்று வருட காலமும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன. (அவை அட்டவணை 8 இனால் காட்டப்பட்டுள்ளது)

அட்டவணை 8 : தகவல் தொழில்நுட்ப பட்டப் பாடநெறியில் (BIT) ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்

| **மாவட்டம்** | **நிறுவனம்** |
|---|---|
| அம்பாறை | (1) Global Institute of Professional Education |
| மட்டக்களப்பு | (2) * ESOFT கணனிக் கற்கை நிறுவனம் |
| கொழும்பு | (1) * Aurora கணனிக் கற்கை நிறுவனம், மகரகம<br>(2) *E-Academy, கொழும்பு 06<br>(3) *Earth International, கொழும்பு 08<br>(4) Easl J Lanka கணனிக் கற்கை நிறுவனம்,கொழும்பு 08<br>(5) * ESOFT கணனிக் கற்கை நிறுவனம்,கொழும்பு 04<br>(6) ESOFT கணனிக் கற்கை நிறுவனம்,கொழும்பு 06 |

| | |
|---|---|
| | (7) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், நுகேகொட<br>(8) Foundation of IT Professionals, பன்னிபிட்டிய<br>(9) Foundation of IT Professionals, கொழும்பு 08<br>(10) * IDM கணனிக் கற்கை நிறுவனம், கொழும்பு<br>(11) *Matrix Institute of IT, கொழும்பு 04<br>(12) *Openarc School of Business and Technology, கொழும்பு 06<br>(13) *Widewake Solutions, பெப்பிலியான |
| காலி | (1) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், |
| கம்பஹா | (1) Earth International<br>(2) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், கம்பஹா<br>(3) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், கிரிபத்கொட<br>(4) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், நீர்கொழும்பு |
| யாழ்ப்பாணம் | (1) ESOFT கணனிக் கற்கை நிறுவனம்,<br>(2) * MIS BIT Campus<br>(3) Mobile @ Net Computer Services |
| கண்டி | (1) * ESOFT கணனிக் கற்கை நிறுவனம், |
| கேகாலை | (1) Institute of Computer Studies |
| குருநாகல் | (1) *ESOFT கணனிக் கற்கை நிறுவனம், |
| மாத்தறை | (1) Dbase School of Computing<br>(2) ESOFT கணனிக் கற்கை நிறுவனம்,<br>(3) IDM கணனிக் கற்கை நிறுவனம், |
| இரத்தினபுரி | (1) ITsoft கணனிக் கற்கை நிறுவனம்,பலாங்கொடை |
| திருகோணமலை | (1) ESOFT கணனிக் கற்கை நிறுவனம், |

கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம் 09 தொடர் கல்விப் சான்றிதழ் பாடநெறிகளை மேற்கொள்வதுடன், 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பாடநெறியைக் கற்பதற்கு கவரப்பட்டுள்ளனர். அட்டவணை 9 கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம் நடாத்தும் கணனி விஞ்ஞான சான்றிதழ் பாடநெறிகளைக் காட்டுகின்றது. (D - காலம் நாட்களில் ;B - குழுக்களின் எண்ணிக்கை; P - கலந்துகொண்டோரின் எண்ணிக்கை)

**அட்டவணை 9 : கணனி விஞ்ஞான சான்றிதழ் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

| பாடநெறி | 2014 | D | B | P |
|---|---|---|---|---|
| JavaSE பயன்படுத்தி ஜாவா உள்ளீட்டுப் பயன்பாடு | 89 | 8 | 3 | 71 |
| உயர் ஜாவா உள்ளீட்டுப் பயன்பாடு | 67 | 8 | 2 | 44 |
| Unix/Linux வலையமைப்பு மற்றும் கட்டமைப்பு நிர்வாகம் | 71 | 5 | 3 | 78 |
| உயர் பல்லூடக இணைய வடிவமைப்பு மற்றும் விருத்தி உத்திகள் | 39 | 8 | 1 | 12 |
| AutoCAD2010 பயன்படுத்தி கணனியுடன் தொடர்பான வடிவமைப்பு | 18 | 8 | - | - |
| திட்ட முகாமைத்துவ மென்பொருள் | 24 | 2 | - | - |
| PHPமற்றும் MySQL உடன் வேகமான இணையப் பயன்பாட்டு அபிவிருத்தி. | 7 | 8 | 1 | 18 |
| கணனிச் சொல் செயலாக்கம் மற்றும் கணனியை உதவியாகக் கொண்ட மொழிபெயர்ப்பு கருவிகள். | - | 3 | 1 | 25 |
| Ms Office பயிற்சிப் பாடநெறி | - | 6 | 1 | 14 |
| என்ட்ரொயிட் உள்ளீடு விருத்தி | - | 8 | 2 | 37 |
| தொழில் விருத்திக்காக கணனி | - | 12 | 1 | 40 |
| **மொத்தம்** | **389** | **47** | **18** | **339** |

**வெளிநாட்டு மாணவர்கள்**

பிராந்தியத்தில் சிறந்த மத்திய நிலையமாக ஏற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு மாணவர்களைக் கவர்தல் முக்கியமாகும். தொடர்ந்து சில காலமாக வெளிநாட்டு மாணவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் இதுவரை வெளிநாடுகளில் கற்கும் உள்நாட்டு மாணவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர். 2011 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் முதலாவது மாணவன் கணனி விஞ்ஞான பட்டப் பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்டான். 2013 ஆம் ஆண்டில் பூட்டானிலிருந்து முதலாவது வெளிநாட்டு மாணவன் தகவல் தொழில்நுட்ப முதுமாணிக் கற்கைக்காக இணைந்து கொண்டதுடன், பின்னர் பாகிஸ்தான் மாணவன் ஒருவன் தகவல் பாதுகாப்பு விஞ்ஞானமாணி பட்டத்திற்காக பதிவு செய்துகொண்ட போதிலும் முதல் 06 மாதங்களின் பின்னர் விலகிக் கொண்டான். இந்த ஆண்டில் நைஜீரிய மாணவன் ஒருவன் இணைந்து கொண்டான். வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய தகவல்கள் அட்டவணை 10 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 10 : வெளிநாட்டு மாணவர்கள்**

| பாடநெறி | ஊடகம் | சேர்த்துக்கொள்ளல் | 1 ஆம் வருட மாணவர்கள் | 2 ஆம் வருட மாணவர்கள் | 3 ஆம் வருட மாணவர்கள் | 4 ஆம் வருட மாணவர்கள் | பட்டங்களைப் பெற்றுக்கொண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணனி விஞ்ஞானம் | ஆங்கிலம் | - | - | - | 01* | - | - |
| தகவல் தொழில்நுட்பம் முதுமாணிப் பட்டம் | ஆங்கிலம் | 01 | 01 | 01 | - | - | - |

* 2015 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டது

**ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய பாடநெறிகள்**

சகல இளமாணிப் பட்டப் பாடநெறிகளும் ACM/IEEEவழிகாட்டி மற்றும் அதனுடன் இயைந்து செல்வதற்காக வரிசைப்படுத்தல் மற்றும் குறிப்பிட்ட கல்வியாண்டில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. புதிய மென்பொருள் பொறியியல் பாடநெறி 03 வருடங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. பட்டப் பாடநெறியை மேற்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் சான்றிதழ் பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் சம்மேளனத்துடனும்(FITIS)தகவல் தொழில்நுட்பத்தில் சர்வதேச தேர்ச்சி (ICIT) சோதனையொன்றை நடாத்துவதற்காக தேசிய இணைய வழி தொலைக் கல்வி சேவை (NODES) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தை 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்த போதிலும் சில ஆளணி அங்கத்தவர்களின் எதிர்ப்புக் காரணமாக இந்தப் பிரேரணை அகற்றிக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் கணனி சேவைகள் நிலையம் (CSC) ஊடாக கைத்தொழில்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக புதிய சான்றிதழ் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 11 : புதிய பாடநெறிகள்**

| பாடநெறி | ஊடகம் | சான்றிதழ் | பட்டம் | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | ஆய்வியல் முதுமாணி | கலாநிதி(முனைவர்) |
|---|---|---|---|---|---|---|---|
| மென்பொருள் பொறியியல் விஞ்ஞானம் | ஆங்கிலம் | - | 1 | - | - | - | - |
| சான்றிதழ் பாடநெறி | ஆங்கிலம் | 4 | - | - | - | - | - |

## ஆராய்ச்சி

### ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள்

பல்வேறு ஆராய்ச்சிக் குழுக்களின் கீழ் மற்றும் ஆராய்ச்சிக் கற்கை மாணவர்கள் ஊடாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன (அட்டவணை 13). கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் பிரதானமாக தற்போது செயற்படுத்தும் ஆராய்ச்சி செயற் திட்டங்களை மையப்படுத்தி தனது முழு நேர/ பகுதி நேர ஆய்வியல் முதுமாணிப் பாடநெறிக்காக கணனி விஞ்ஞானம் / பொறியியல் விஞ்ஞானம் இளமாணிப் பட்டத்தினை உயர் தரத்தில் சித்தியடைந்துள்ள பட்டதாரிகள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆண்டினுள் 08 புதிய மாணவர்கள் ஆய்வியல் முதுமாணிப் பட்டத்திற்கும், ஒரு மாணவன் கலாநிதிப் பட்டத்திற்கும் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது கற்கை நிறுவனத்தில் 16 சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் 10

வெளிவாரியான ஆராய்ச்சியாளர்களின் கீழ் 51 மாணவர்கள் 25 துறைகளில் ஆராய்ச்சிக் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை ஆய்வியல் முதுமாணி /கலாநிதிப் பட்டத்திற்காக 22 ஆராய்ச்சித் திட்டங்களை நிறைவு செய்துள்ளனர். 18முதுமாணி / கலாநிதிப் பட்டத்தினை பயிலும்மாணவர்கள் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

மேற்கு சிட்னிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கினிகே அவர்கள் சமூக வலையமைப்பு ஆராய்ச்சித் திட்டத்திற்காக (Social Life Network Research Project) ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் சில தினங்கள் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்கு வருகை தந்தார். இந்தத் திட்டத்தை 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் புதிய கண்டுபிடிப்புக்கள் (புத்தாக்கம்) திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நகர சபையின் டெங்கு ஒழிப்பு திட்டத்திற்காக சிங்கப்பூரின் "Nanyang" தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் குழுவொன்றும் கொழும்புக்கு வருகை தந்தனர்.

**அட்டவணை 12 : ஆளணியின் ஆராய்ச்சித் துறைகள்**

| ஆராய்ச்சித் துறை | **முழு நேரம்** | **பகுதி நேரம்** | **மொத்தம்** | **புதியவை** | **நிறைவு செய்யப்பட்டவை** |
|---|---|---|---|---|---|
| செயற்கை அறிவாண்மை | 1 | 2 | 3 | 0 | 0 |
| தகவல் தொழில்நுட்ப உதவி | 0 | 1 | 1 | 1 | 0 |
| கணனி ஓவியம் | 1 | 1 | 2 | 0 | 1 |
| கணனி விஞ்ஞானம் | 0 | 1 | 1 | 0 | 0 |
| கணனி நோக்கு | 1 | 0 | 1 | 1 | 0 |
| தரவு அகழ்தல் (Data Mining) | 1 | 0 | 1 | 0 | 0 |
| தரவு சார்ந்த விளக்கம்(Data Semantics) | 2 | 0 | 2 | 0 | 0 |
| டிஜிட்டல் குற்ற ஆய்வு | 1 | 0 | 1 | 0 | 0 |
| இலத்திரணியல் கற்கைகள் | 2 | 5 | 7 | 1 | 0 |
| விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்கைகள் | 0 | 1 | 1 | 0 | 0 |
| புவியியல் தகவல் தொகுதி | 1 | 1 | 2 | 0 | 1 |
| பசுமை தகவல் தொழில்நுட்பம் | 1 | 0 | 1 | 0 | 0 |
| சுய கண்டுபிடிப்புஅனுகூலப்படுத்தல் | 0 | 1 | 1 | 0 | 0 |
| உயர் செயற்திறன் | 0 | 1 | 1 | 1 | 0 |
| நிழற்படச் செயலாக்கம் | 0 | 2 | 2 | 1 | 1 |
| தகவல் தொகுதி | 3 | 0 | 3 | 1 | 0 |
| பொறியியல் விஞ்ஞானம் | 1 | 1 | 2 | 1 | 0 |
| இயந்திரம் பற்றிய கற்கை | 2 | 0 | 2 | 1 | 0 |
| அலை பேசி ஊடாக கற்றல் | 1 | 0 | 1 | 0 | 0 |
| பல்லூடகம் | 1 | 2 | 3 | 0 | 0 |
| இயற்கை மொழிகள் செயலாக்கம் | 2 | 1 | 3 | 0 | 0 |
| நரம்பிழை வலையமைப்பு | 0 | 1 | 1 | 0 | 0 |
| உணர்வு வலையமைப்பு | 0 | 2 | 2 | 0 | 1 |
| சமூக விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 0 | 3 | 3 | 0 | 0 |
| மென் பொருள் பொறியியல் | 2 | 2 | 4 | 1 | 0 |
| **மொத்தம்** | **23** | **28** | **51** | **09** | **04** |

கற்கை நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் உபயோக வழிகாட்டியுடனான ஆராய்ச்சி நிதியமொன்று தாபிக்கப்பட்டது. பட்டப்பின் கற்கை மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடநெறிகளின் ஊடாக 4 மில்லியன் ரூபா ஆரம்பப் பங்களிப்பினைக் கொண்ட

இந்த நிதியத்தின் ஊடாக ஈட்டப்பட்ட வருமானத்துடன் தொடர்ந்து வளர்ச்சியடைந்ததுடன் தற்போது 100 மில்லியன் ரூபா வரை வளர்ச்சியடைந்துள்ளது.சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட ஆளணிகளுக்கு ஆராய்ச்சிக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு மற்றும் சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் சஞ்சிகைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு வருடாந்தம் முறையே ரூபா 350,000/- மற்றும் ரூபா 250,000/- வரை பயன்படுத்த முடியும். இது கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் வருடாந்த வெளியீடுகளின் எண்ணிக்கையை முப்பதிலிருந்து அறுபது வரை அதிகரித்தது. இந்த ஆண்டில் 54வெளியீடுகளிடையே 12 நாடுகளில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கும். கல்விசார் ஆளணியில் 23 பேர் (58%) ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். அட்டவணை 13 இல் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளணியைச் சேர்ந்தவர்களின் 123 கட்டுரைகள் வெள்யிடப்பட்டுள்ள விதம்: ஜீ.என்.விக்கிரமநாயக்க (12). கே.பீ.ஹேவாகமகே (11), ஜீ.கே.ஏ.டயஸ் (9), டீ.ஏ.எஸ்.அத்துகோரால (7), கே.எல்.ஜயரத்ன (6), என்.டீ.கொடிக்கார (6), ஏ.ஆர்.வீரசிங்க (6), கே.ரீ.என் த சொய்சா (5), சீ.ஐ.கெப்பிட்டியாகம (5), டீ.டீ.கருணாரத்ன (3), ஜீ.டீ.எஸ்.பீ.விமலரத்ன (3), வை.ஏக்கநாயக்க (3), எஸ்.பீ.மாத்தரஆரச்சி (2), எச்.எல்.பிரேமரத்ன (2), ஆர்எம்.பீ.என்.சோமரத்ன (2), எச்.ஏ.கல்தேரா (1), கே.கே.கே.தர்மதிலக்க (1), எச்.பீ.ஏக்கநாயக்க (1), எம்.ஜீ.என்.ஏ.எஸ்.பெர்னாந்து (1), ஜே.எஸ்.குணதிலக்க (1), ரீ.சீ.ஹல்லொலுவ (1), ஆர்.எஸ்.மதநாயக்க (1), எஸ்.ரீ.நந்தசார (1), ஹகீம் யூசுப் (1), ரீ.ஏ.வீரசிங்க (1)

**அட்டவணை 13 : ஆராய்ச்சி சுருக்கம்**

| விடயம் | வெளியீடு | வர்த்தகமயப்படுத்தப்பட்ட | சமர்ப்பிக்கப்பட்ட |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 123 | - | 54 |
| புதிய கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை | - | - | - |
| சஞ்சிகை எண்ணிக்கை | 17 | - | - |
| ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை | 2 | - | - |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | 52 | - | - |
| ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **71** | - | **54** |

### மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

குறிப்பிட்ட செயற் திட்டங்களை இனங் காணல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் இன்னுமொரு திட்டமாகும். கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் ஏழாவது ஆராய்ச்சிக் கலந்துரையாடல் இறுதியாண்டு மாணவர்களின் பங்கேற்புடன் 2015.04.29 ஆம் திகதி நடைபெற்றது. நிறுவனம் சஞ்சிகையில் கட்டுரைகளை வெளியிட்டது. நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச தகவல் தொழில்நுட்ப மாநாடு 2015. ஆகஸ்ட் 24 - 26 வரை நடாத்தப்பட்டதுடன், ஆகஸ்ட் 26 ஆம் திகதி மாநாட்டுக்குப் பின்னரான செயலமர்வொன்றும் நடாத்தப்பட்டது. Ubi-Media Computing ( UMEDIA2015)சம்பந்தமான 8 ஆவது சர்வதேச மாநாட்டுடன் இணைந்து ICTer மாநாடு நடாத்தப்பட்டது. நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு அறவீடுகளின்றி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டதுடன், அதற்கான செலவு ரூபா 435,000/- ஆகும். அது தவிர நிறுவனம் ஆய்வறிவியல் முதுமாணி / கலாநிதிப் பட்டத்தைப் பயிலும் மாணவர்களுக்கு ரூபா 60,000/- அனுசரணை வழங்கியுள்ளது. கற்கை நடவடிக்கையை மேற்கொள்ளும் ஒருவருக்கான உச்சளவு தொகையை வரையறுப்பதற்காக சகல மாணவர்களும் பயன்படுத்தும் ஆராய்ச்சி நிதிக்கான பொறிமுறை நிறுவனத்தினால் திருத்தியமைக்கப்பட்டது. ஆராய்ச்சி உதவிகள் இந்த ஆண்டில் வழங்கப்படவில்லை. ICTer மாநாட்டின் ஊடாக ஈர்க்கப்பட்ட 130 ஆராய்ச்சிக் கட்டுரைகள் முழுமையான கட்டுரைகளாகவும், 18 சுருக்கமானவைகள் எனவும் கவனத்தை ஈர்த்தது. ஒன்றிணைந்த மாநாட்டில் வெளிநாட்டவர்கள் 63 பேர் கலந்து கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க வருடாந்த விரிவுரை செப்டெம்பர் 09 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடாத்தியது. தேமான்ய எம்.டீ.டீபீரிஸ் அவர்கள் “தொழில்நுட்ப மாற்றத்துடன் கல்வியின் தரம் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பொறுப்புக்கள்” எனும் தலைப்பில் உரையாற்றினார். ஆளணியினரின் பங்கேற்புடன் மாநாடு, கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் சம்பந்தமான தகவல் அட்டவணை 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 14 :மாநாடு, கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | கலந்து கொண்ட | முன்வைக்கப்பட்ட வெளியீடுகள் | முன்வைப்புக்கள் |
|---|---|---|---|
| தேசிய மாநாடுகளுக்காக சிரேஷ்ட ஆளணி அங்கத்தவர்கள் | 20 | 5 | 1 |
| சர்வதேச மாநாடுகளுக்காக சிரேஷ்ட ஆளணி அங்கத்தவர்கள் | 21 | 10 | 12 |
| ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மாநாடுகள் (ICTer) | 290 | 74 | - |
| ICTer சஞ்சிகை | 1 | 1 | - |
| மொத்தம் | 332 | 90 | 13 |

## பெற்றுக்கொண்ட விருதுகள்

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதங்கு ஊக்குவிக்கப்பட்டார்கள். இலத்திரணியல் சுகாதாரம் மற்றும் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவுகளில் "Run Tropica" திட்டத்திற்காக (மலேசியாவின் மொனேஷ் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது) மற்றும்K-8 விமான ஊக்கி (பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது) போன்ற போட்டிகளில் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை வெற்றிகொள்வதற்கு நிறுவனத்தின் ஆளணியால் முடியுமாகியது. "sangeethalya.lk" மற்றும்"Run Tropica" இந்தியாவின் மன்னன் விருது வழங்கும் விழாவில் இலத்திரணியல் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு மற்றும் இலத்திரணியல் சுகாதாரம் போன்ற பிரிவுகளின் கீழ் விருதுகளைப் பெற்றுக் கொண்டன. மேலும் சில ஆளணி அங்கத்தவர்கள் அவர்களது ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தின் மற்றும் தேசிய ஆராய்ச்சி சபையினால் உதவி வழங்கப்பட்டது. பெற்றுக்கொண்ட விருதுகள் சம்பந்தமான விபரம் அட்டவணை 15 இன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் "Nanyang" தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "Mo-Buzz Dengue Mobile app" பெப்ரவரி 12 ஆம் திகதி கொழும்பு நகர சபையில் மீண்டும் நடாத்தப்பட்டது.சிங்கப்பூரின் "Nanyang" தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் குழுவொன்றினால் முன்னேற்றமானது மேற்பார்வை மற்றும் செயற்படுத்தும் சிக்கல்கள் பின்னூட்டலுக்குட்படுத்தப்பட்டது. "கொவி நெண" எனும் விவசாயத் திட்டம் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் திட்டமொன்று தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நிதி வழங்கப்படும் திட்டத்தை விடவும் முக்கியத்துவப்படுத்தி தேசிய மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.இந்தத் திட்டம் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தின்ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. ஐரோப்பா சங்கத்தின் மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்கும் முதலாவது விடயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் பிடிக்கும் படகுகளுக்கான இலத்திரணியல் லொக் (log) புத்தகம்எனும் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் பிரேரணையை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

அட்டவணை 15 : பெற்றுக் கொண்ட விருதுகள்

| விடயம் | பெற்றுக் கொண்ட விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் ஆளணியின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தேசிய மட்டம் | 2 | 2 | 3 |
| சர்வதேச மட்டம் | 2 | 2 | 1 |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | 4 | 4 | 4 |

## கல்விசார் ஆளணி

2015 ஜனவரி மாதம் முதலாவது தினம் நீண்ட கால சேவைக்கான விருது திரு.ஜீ.கே.ஏ.டயஸ் - சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்- I, திருமதி எம்.எஸ்.ராஜபக்ஷ - சிரேஷ்ட ஆளணி உதவியாளர் (தரவு பகிர்வு) மற்றும் திரு.எச்.ஏ.சுனில் (அலுவலக உதவியாளர்) போன்றோருக்கு வழங்கப்பட்டது. திரு.சுனில் மற்றும் திருமதி ஜீ.டி.எல்.பீ.குணரத்ன (சிரேஷ்ட ஆளணி உதவியாளர்) பல்கலைக்கழகத்தில் நீண்ட காலம் சேவையாற்றியதன் பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்கள். ஆளணி எண்ணிக்கை மீளாய்வுக் கூட்டம் பெப்ரவரி 25 ஆம் திகதி நடாத்தப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அவர்களது அறிக்கைகளை எமது அறிக்கைகளுடன் சேர்த்து முன்வைக்க முடியுமான வகையில் நிறுவனத்தின் மீளாய்வுக் கூட்டம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடாத்தப்பட்டது.

இரண்டு கல்விசார் ஆளணி அங்கத்தவர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் (03 மாதங்கள்) ஆண்டினுள் ஓய்வு விடுமுறையைப் பெற்றனர். கைத்தொழில் துறையில் செலுத்தப்படும் கவர்ச்சிகரமான பணிக்கொடைகள் காரணமாக நிறுவனத்திற்கு கல்விசார் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. கல்விசார் மற்றும் கல்வி சாரா உதவியாளர் வெற்றிடங்கள் 86 இல் 42 இனை மாத்திரமே நிரப்ப முடியுமாகியது. தனியார் துறையினரால் வழங்கப்படும் உயர் அனுகூலங்கள் காரணமாகபயிற்சி பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை தக்க வைத்துக்கொள்ளல் மற்றும் திறமையான இளம் அறிஞர்களை ஈர்த்தக்கொள்வது சிரமமான விடயமாகவுள்ளது. நிரந்தர ஆளணி தவிர்ந்த கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் தகவல் தொகுதி பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் சில பாடநெறிகளைக் கற்பிப்பதற்காக வெளிவாரியான ஆளணியிடம் தங்கியிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை 180 நாட்கள் பணியாற்றியிருப்பின் நிரந்தரப்படுத்தும் திட்டத்தின் கீழ் 15 ஊழியர்கள் தகைமை பெற்றதுடன் 2015 ஆம் ஆண்டு நிரந்தர ஆளணியில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஒப்படை அடிப்படையில் நியமிக்கப்பட்ட 06 நியமனங்கள் தொடர்பாக இன்னும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியிலான மனித வளத்தினை ஈர்த்துக் கொள்வதற்காக நடப்பு ஆண்டில் அவுஸ்திரேலியாவிலிருந்து குறுகிய கால அடிப்படையில் வருகை தந்த ஆராய்ச்சியாளருக்கு வசதிகள் ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கல்விசார் ஆளணி பற்றிய விபரம் அட்டவணை 16 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 16 : ஆளணி பற்றிய விபரம்**

| விபரம் | ஊடகம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | ஆலோசகர் |
|---|---|---|---|---|---|---|---|
| கணனி (நி) | ஆங்கிலம் | - | 03 | 21 | 14* | - | 02 |
| கணனி (ஓ) | ஆங்கிலம் | - | - | 01 | - | 08 | 18 |

*இருவர் விடுமுறை பெற்றுள்ளனர்

**கல்வி சாரா ஆளணி : நிரந்தர(P)ஒப்பந்த/ஒப்படை (C/A)**

வெளிவாரி மற்றும் தொடர் கல்விப் பாடநெறிகள் மற்றும் பட்டப்பின் கற்கைப் பாடநெறிகளுக்கான இணைய வழிச் செலுத்துகை வசதிகள் தொடர்ந்தும் ஏற்பாடு செய்யப்பட்டன. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் நிதிக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டதுடன் கண்காணிப்பை செயற்படுத்தும் திட்டம் மற்றும் நிரல் குறியீட்டை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை தொகுதியொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கல்வி சாரா ஆளணி பற்றிய விபரம் அட்டவணை 17 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் கல்வி சாரா ஆளணியின் எண்ணிக்கை 78 என அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 37 நிரந்தரப் பதவிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பணிகளில் அதிகளவு ஒப்பந்த மற்றும் ஒப்படை ஆளணியின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 16 பேர் நிரந்தர சேவைக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**அட்டவணை 17 : கல்வி சாரா ஆளணி**

| வகை | சிரேஷ்ட (நிர்வாகம்) | சிரேஷ்ட ஆளணி | கனிஷ்ட ஆளணி | சிற்றூழியர்கள் | செயற் திட்ட ஆளணி |
|---|---|---|---|---|---|
| நிரந்தரம் | 8 | 3 | 20 | 6 | - |
| ஒப்பந்தம் | - | 6 | 11 | 8 | 17 |
| ஒப்படை | - | 1 | 10 | 9 | 7 |

**ஆளணிக்கான பயிற்சி மற்றும் வெளிநாட்டு விடுமுறை**

பேராசிரியர் என்.டீ.கொடிக்கார (ஜனவரி 01 முதல்) மற்றும் கலாநிதி ஏ.ஆர்.வீரசிங்க (நவ.01 முதல்) ஆகிய இருவரும் ஒரு வருட ஓய்வு விடுமுறையைப் பெற்றுக் கொண்டிருப்பதுடன், ஓய்வு விடுமுறையைப் பெற்றுக் கொண்டுள்ள பேராசிரியர் என்.டீ.கொடிக்கார அவர்கள் செப்.24 முதல் ஒக்.04 வரை அவுஸ்த்திரேலியாவின் மெல்போர்ன் நோக்கிப் பயணமானார்.

கலாநிதி எச்.ஏ.கல்தேரா (இத்தாலி), கலாநிதி எம்.டீ.ஆர்.என். தயாரத்ன (இந்தியா மற்றும் மலேசியா), கலாநிதி ரீ.என்.கே. த சொய்ஸா (இந்தியா), திரு.கே.கே.கே.தர்மதிலக்க (மலேசியா), கலாநிதி திருமதி யமாயா ஏக்கநாயக்க (அவுஸ்த்திரேலியா), திரு.எம்.ஜீ.என்.ஏ.எஸ்.பெர்னாந்து (அமெரிக்கா), கலாநிதி டீ.டீ.கருணாரத்ன (தயர்லாந்து), ரீ.ஏ.வீரசிங்க (சுவீடன்), திரு.எம்.ஐ.ஈ.விக்கிரமசிங்க (மலேசியா), பேராசிரியர் ஜீ.என்.விக்கிரமநாயக்க (கனடா) போன்ற கல்வி சார்ந்த ஆளணியைச் சேர்ந்த 10 பேர் தமது ஆராய்ச்சிகளை சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டு மாநாடுகள் / செயலமர்வுகளில் கலந்து கொண்டனர். இது தவிர, கலாநிதி எஸ்.எம்.கே.டீ.அருணதிலக்க (இந்தியா), கலாநிதி எம்.டீ.ஆர்.என். தயாரத்ன (இத்தாலி), கலாநிதி ரீ.என்.கே. த சொய்சா(கொரியா) திரு.எச்.ஈ.எம்.எச்.பீ.ஏக்கநாயக்க (சுவீடன்), கலாநிதி திருமதி எம்.டீ.ஜே.எஸ்.குணதிலக்க (ஸ்பெயின்), பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே (மலேசியா, சுவீடன் (மூன்று முறை), கொரியா), கலாநிதி கே.எல்.ஜயரத்ன (சிங்கப்பூர்). திரு.எஸ்.எஸ்.பீ.மாத்தரஆரச்சி (மலேசியா), கலாநிதி டீ.என்.ரணசிங்க (இந்தியா), எம்.டப்.ஏ.சீ.ஆர்.விஜேசிங்க (பிரான்ஸ்) போன்ற கல்வி சார் ஆளணியைச் சேர்ந்த 11 பேர் வெளிநாட்டு மாநாடுகள் / செயலமர்வுகளில் கலந்து கொண்டனர்.

7 ஆளணி அங்கத்தவர்கள் வெளிநாட்டு சுற்றுப் பயணத்திற்காக தனிப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் ; கலாநிதி எம்.டீ.ஆர்.என். தயாரத்ன (இந்தியா), திரு.கே.எஸ்.குணதிலக்க(நேபாளம்), திரு.டீ.எம்.குணவர்தன (இந்தியாவுக்கு இருமுறை), கலாநிதி கே.எல்.ஜயரத்ன (இந்தியா, ஐக்கிய இராச்சியம்), கலாநிதி டீ.என்.ரணசிங்க (இந்தியா), திருமதி ஆர்.எம்.பீ.என்.சோமரத்ன(ஐக்கிய இராச்சியம்) மற்றும் ஜீ.என்.விக்கிரமநாயக்க (மலேசியா, இந்தியா) போன்றவர்களாவர்.

திரு.எம்.ஐ.ஈ.விக்கிரமசிங்க (மலேசியா) மற்றும் திருமதி எல்என்சீ தசில்வா (இலங்கை) ஆகியோர் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்து தமது அலுவலை பொறுப்பேற்றுக் கொண்டதுடன், திரு.வீ.பீ.விஜேசூரிய (ஐ.இ) தமது முதுமாணிப் பட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் நாட்டுக்குத் திரும்பியுள்ளார். திரு.எச்.எம்.சிரிவர்தன (ஜப்பான்) கற்கை விடுமுறையைப் பெற்றுக் கொண்டுள்ளார். திருமதி ஆர்எம்.பீ.என்.சோமரத்ன ஐக்கிய இராச்சியத்தில் கலாநிதிப் பட்டத்தை மேற்கொள்வதற்காக டிசம்பர் மாதம் முதல் விடுமுறை பெற்றுக் கொண்டுள்ளார்.

**ஆளணி நலனோம்புகை நடவடிக்கைகள்**

**காப்புறுதித் திட்டம்**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் பணியாளர்களின் நலனோம்புகையை முன்னிட்டு 2013 ஆம் ஆண்டில் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்தது. பணியாட் தொகுதியின் 1/3 பகுதியினர் இந்த திட்டத்தில் இணைந்து கொண்டதுடன், 2014 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிலையத்துடன் இணைந்து உரிமை கோர முடியுமான தொகையினைப் பார்க்கிலும் மிகவும் குறைந்த தவணைப் பணத்தைச் செலுத்த வேண்டியதும், அனுகூலங்களுக்கு உரிமை கோரும் முறையுடன் மீண்டும் தாபிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 2015 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**வருடாந்த சுற்றுலாப் பயணம்**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் ஆளணியைச் சேர்ந்தவர்கள் ஒக்.23 - 27 வரையிலான காப் பகுதியல் இரண்டு குழுக்களாக வருடாந்த சுற்றுப் பயணமாக சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டனர். நலன்புரிச் சங்கத்தினால் ஆளணியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் குளிர்சாதனப் பெட்டி, மயிக்ரோவேவ் அடுப்பு வசதிகள் பயன்மிக்க வகையில் பயன்படுத்தப்பட்டது. 2015 ஜனவரி 01 ஆம் திகதி முதல் பயன்பாட்டிற்காக உடற் பயிற்சி உபகரணங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட 5 மில்லியன் ரூபா நலன்புரிச் சங்கத்தின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் நலன்புரிச் சங்கத்தினால் வருடாந்த சுற்றுலாப் பயணத்திற்கான நிதியைச் சேகரித்துக் கொள்வதற்காக செப். 08 ஆம் திகதி இசைக் கச்சேரியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

## நிதி நிர்வாகம்

**மீண்டெழும் செலவினம்**

இளமாணிப் பட்டச் செயற்பாடுகளுக்காக திறைசேரி நிதி போதாமை காரணமாக கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்தைப் பயன்படுத்தி அன்றாட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இளமாணி (முதல்) பட்டத்திற்காக ஒரு மாணவனுக்கான செலவினம் ரூபா 195,000 ஆக இருப்பதுடன், மூலதனச் செலவாக மேலும் 102 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. உள்ளக பட்டப் படிப்பு வேலைத் திட்டத்திற்காக 130 மில்லியன் ரூபா செலவை நிறுவனம் மேற்கொள்கின்றது. அது இளமாணிப் பட்டத்திற்கான மீண்டெழும் செலவினத்தில் 56% ஆகும். ஆளுக்கான வேதனாதிகள் தவிர அரசாங்கம் ஒதுக்கிய நிதியானது கடந்த ஆண்டினை விடவும் குறைந்தளவினைக் கொண்டுள்ளது. மீண்டெழும் செலவினத்தின் வீழ்ச்சி பற்றிய விபரம் அட்டவணை 18 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்கு போதுமானளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை காரணமாக கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக 2015 ஜனவரி 5 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆஜணக் குழுவின் கணக்காளருடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

**அட்டவணை 18 மீண்டெழும் செலவினம்** ரூ. 000'

| விடயம் | 2014 | 2015 |
|---|---|---|
| ஆளுக்கான வேதனாதிகள் | 124,691 | 148,462 |
| பயணச் செலவு | 645 | 1,060 |
| வழங்கல்கள் | 8,969 | 6,489 |
| பராமரிப்பு | 5,303 | 5,400 |
| ஒப்பந்த சேவைகள் | 37,614 | 35,810 |
| ஏனையவை | 108,306 | 109,831 |
| மொத்தம் | **285,528** | **307,052** |
| அரசாங்க நிதி ஒதுக்கீடு | 93,716 | 122,300 |

**மூலதனச் செலவினம்**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் அதன் கணனிப் பயன்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக பௌதீக வளங்களில் முதலீடு செய்தது. ஈட்டிய நிதியைப் பயன்படுத்தி சில கணனி ஆய்வுகூடங்களில் நவீன, உயர் தொழில்நுட்பக் கருவிகள் தாபிக்கப்பட்டன. இந்தக் கற்கை நிறுவனத்தின் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்களைப் பேணி வருவதற்கு நிரல் குறியீட்டுத் தொகுதியோன்று அமைக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட கொள்ளவுக்கு ஏற்ப கணனி வலையமைப்பு செயற்பாட்டு மையத்தின் கருவிகள் மேம்படுத்தப்பட்டன.

மூலதனச் செலவுகள் சம்பந்தமான விபரம் அட்டவணை 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி முன்னேற்றம் மற்றும் மீண்டெழும் மற்றும் செயற் திட்டச் செலவுகள் 20 - 24 அட்டவணைகள் ஊடாக காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 19 மூலதனச் செலவினம்** ரூ. 000'

| விடயம் | 2014 | 2015 |
|---|---|---|
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 37,328 | 16,875 |
| இயந்திர சாதனங்கள் கொள்வனவு | - | - |
| கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 71,702 | 81,906 |
| ஏனையவை | 6,506 | 4,268 |
| மொத்தம் | **115,536** | **103,049** |
| அரசாங்க நிதி ஒதுக்கீடு | 15,000 | 43,082 |

**செயற் திட்டங்கள் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியம்)**

சில கற்கைத் துறைகள் தொடர்பாக பலம்மிக்க ஆராய்ச்சிக் குழுவொன்று கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திடம் காணப்படுகின்றது. விம்பப் படங்கள் மற்றும் பட வரைபு(பீரங்கி நிபுணத்துவம், இலத்திரணியல் பதிவுப் புத்தகம்) இ. - கற்கை (ஆங்கில மொழி விருத்தி) நிலையான கணனிப் பயன்பாடு (யானைகளின் நடத்தை ஆய்வு) உணவுப் பாதுகாப்பு (விவசாயம்), மொழித் தொழில்நுட்பம் (மொழித் திட்டம்) சுய மேற்பார்வை போன்ற ஆராய்ச்சி ரீதியிலமைந்த கருவிகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் ஆராய்ச்சி ஒத்துழைப்பு கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளதுடன் கைத்தொழில் - பல்கலைக்கழகத்திற்கிடையிலான தொடர்பையும் பலப்படுத்தியுள்ளது.

ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற் திட்டங்கள் தவிர கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் ஊடாக அரச மற்றும் தனியார் துறைக்கு ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. கடந்த காலங்களில் மேற்கொண்ட சில அலுவல்கள் சம்பந்தமாக இந்த கற்கை நிறுவனம் பிரபல்யமடைந்துள்ளது. கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் 1981 முதல் தேசிய தேர்தல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதுடன், இந்த ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் போன்ற இரண்டு தேர்தல்களிலும் ஒத்துழைப்பு வழங்கியது. தற்போது நாடுபூராவும் பிறப்பு, விவாக சான்றிதழ்கள் இந்த நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட மென் பொருளைப் பயன்படுத்தியே வழங்கப்படுகின்றது. நவீன கணனிகளில் சிங்கள மொழியில் அலுவல்களை மேற்கொள்வதற்காக இந்த நிறுவனதத்தின் முயற்சியால் மேம்படுத்தப்பட்ட சிங்கள யுனிகோட் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாண்டில் 08 இணையத்தளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இது தவிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஓய்வூதியத் தொகுதி, கமநல ஓய்வூதியத் திட்டம் என்பவற்றிற்கான முகாமைத்துவ தகவல் தொகுதி (திட்டத்தை மேம்படுத்தல்), மருத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் செலுத்துகை நுழைவுத் தொகுதி, அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் கேள்வி முகாமைத்துவத் தொகுதி, “கப்ருக்க முதலீடு” கடன் திட்டத்தின் தகவல் முகாமைத்துவத் தொகுதி, தேசிய அபாயகரமான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் போதைப் பொருட்கள் முறையற்ற பயன்பாட்டு முகாமைத்துவத் தொகுதி, அனுமதிப் பத்திரங்கள் தகவல் முகாமைத்துவத் தொகுதி மற்றும் இணைய வழிச் சேவை பெறுநர் தொடர்புகள் கூட்டு போன்ற மென்பொருள்(சொப்ட்வெயார்)அபிவிருத்திப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களில் சிலவாகும். உரிமைகள் பதிவுத் தொகுதி, சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக வழங்குகளை இனங்கண்டுகொள்ளும்தொகுதி மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் “ரின் பிரைட் ஸ்டார்”என்பன பூர்த்தி செய்யப்பட்ட சில திட்டங்களாகும்.

இ - கற்கை நிலையத்தின் ஊடாக அநேகமான நிறுவனங்களுக்காக இ- பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட சில ஆட்சேர்ப்பு பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் HETC இற்காக தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில இ - பரீட்சை கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. அத்துடன், இந்தக் கற்கை நிறுவனம் நீதிமன்ற வழக்குகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக டிஜிட்டல் குற்றவியல் ஆய்வு நடவடிக்கைகளை நடாத்தி வருகின்றது.

**தீக்ஷன**

தீக்ஷன, 2006 இல் கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தினால் தாபிக்கப்பட்டு முகாமைத்துவப்படுத்தும் கம்பனியாகும். 2014/15 நிதியாண்டின் இறுதியில் இலாபம் ஈட்டியவண்ணம் தேசிய மற்றும் சர்வதேச பிரஜைகளின் கவனத்தை ஈர்த்துக்கொள்வதற்கு “தீக்ஷன”வுக்கு முடியுமாகியது. 2014 ஆம் ஆண்டிற்கான சிறந்த இ - அரச மற்றும் தரவுகளுக்கான இ - ஸ்வாபிமானி விருதையும் வெற்றிபெற்ற இலங்கை பொலிஸ"க்காக உருவாக்கப்பட்ட தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்கண்டுகொள்ளும் தொகுதி (AFIS) காரணமாக இந்த நிறுவனத்தின் மீது அதிக கவனம் ஈர்க்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அதன் நுழைவுத் தொகுதிக்காகவும், பொது நிர்வாக அமைச்சின் பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை வழங்கும் தொகுதிக்காகவும், காணிப் பதிவாளர் அலுவலகத்தின் A முதல் M வரை மற்றும் LK எனும் பிரிவுகளை முறைப்படுத்துவதற்கும் தீக்ஷன உதவி புரிந்தது. அது தவிர, தீக்ஷன தகவல் தொழில்நுட்பப் பட்டம், ஆய்வியல் முதுமாணி பட்டத்திற்காக இணைய வழி மற்றும் இணையவழியற்ற தொகுதியை பேணி வருவதன் ஊடாக தனது உதவியை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. கம்பனியின் ஆலோசனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 48% இனால் வீழ்ச்சியடைந்தபோதிலும், அதன் மொத்த சொத்து 11.85% இனால் விருத்தியடைந்துள்ளது. சில செயற் திட்டங்களின் மூலம் இதிக இலாபம் ஈட்டியமை காரணமாக கடந்த ஆண்டில் ஈட்டிய பாரிய இலாபமான 4.2 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டியது. தீக்ஷன கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் 2015 செப். மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்பட்டது. குற்ற அறிக்கைகளுக்கான தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்கண்டுகொள்ளும் தொகுதி (AFIS) 2015 இல் மாந்தன் விருதுக்காக இலத்திரணியல் - கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் இறுதிச் சுற்றுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

**கண்காட்சி**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் இன்பொட்டெல் கண்காட்சி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சில நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட மேலும் கண்காட்சிகளில் பங்குபற்றியது. அது தவிர வருடம் முழுவதும் வாராந்தம் வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒலிபரப்பப்பட்டது.

அட்டவணை 20 : மீண்டெழும் செலவினம்

| பெயர், விபரம் | மானியம் ரூ. 000 ' | நிதி வழங்கும் முகவர் நிறுவனம் | மொ.ம.செ. | பயன்பாடு | தள்ளுபடிக் காரணி |
|---|---|---|---|---|---|
| டிக்கிரி தரவு அமைப்பு | 1,558 | கணனி விஞ்ஞானம் பற்றிய சுவீடன் நிறுவனம் | | | |
| கோடைக் கால பாடசாலைத் திட்டம் | 2,777 | ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழகம் | | | |
| ASSERT | 2,087 | உப்சலா பல்கலைக்கழகம் | | | |
| **வெளிநாட்டு நிதியம்** | **6,422** | | | | |
| கள பீரங்கி நிபுணத்துவ பட வரைபுத் தொகுதி | 2,428 | பாதுகாப்பு அமைச்சு | | | |
| முப்பரிமாண கரையோரப் பாதுகாப்பு தொகுதி | 2,655 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| பெருந்தோட்ட உற்பத்தி மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் | 6,008 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| பல்வகைப்பட்ட பிரஜைகளுக்கான இ - கற்றல் | 1,020 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| Face ID - முப்பரிமாண வரைபு ஊடாக குற்றவியல் அறிவியல் மறுசீரமைப்பு | 1,569 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| விமானப் பயிற்சி திட்டம் | 1,008 | பாதுகாப்பு அமைச்சு | | | |
| உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி | 800 | உயர் கல்விக்கான தேசிய நிலையம் | | | |
| **உள்நாட்டு நிதியம்** | **20,226** | | | | |

**மொ.ம.செ.** - மொத்த மதிப்பீட்டுச் செலவு

**செயற் திட்டச் செலவினம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியம்)**

**அட்டவணை 21 :கருத்திட்டச் செலவினம்**

| பெயர் | TCE முழு/கொ உண் மையான செலவு | 2013 செலவு | 2014 செலவு | 2014.12.31 திகதியன்று திரட்டிய செலவு | பௌதீக முன்னேற்றத்தின் வீதம் |
|---|---|---|---|---|---|
| டிக்கிரி தரவு அமைப்பு | | 120 | 465 | 585 | 99% |
| கோடைக் கால பாடசாலைத் திட்டம் | | | 2345 | 2345 | 100% |
| ASSERT | | | 656 | 656 | 25% |
| **வெளிநாட்டு நிதியம்** | | 120 | 3,466 | 3,586 | |
| கள பீரங்கி நிபுணத்துவ பட வரைபுத் தொகுதி | 1010 | 458 | 515 | 1983 | 95% |
| முப்பரிமாண கரையோரப் பாதுகாப்பு தொகுதி | 1709 | 607 | 273 | 2589 | 100% |
| பெருந்தோட்ட உற்பத்தி மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் | | 1666 | 1786 | 3452 | 50% |
| பல்வகைப்பட்ட பிரஜைகளுக்கான இ - கற்றல் | | | 309 | 309 | 100% |
| Face ID - முப்பரிமாண வரைபு ஊடாக குற்றவியல் அறிவியல் மறுசீரமைப்பு | | | 426 | 426 | 50% |
| விமானப் பயிற்சி திட்டம் | | | 836 | 836 | 90% |
| உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி | | | 335 | 335 | 100% |
| **உள்நாட்டு நிதியம்** | 2,719 | 4,515 | 6,220 | 13,454 | |

## நிதிசார் முன்னேற்றம் (செலவுகள்)

**அட்டவணை 22 : நிதிசார் முன்னேற்றம் (செலவு)** ரூ 000'

| விடயம் | நிதி ஏற்பாடு | செலவு | மீதி / மேலதிகம் |
|---|---|---|---|
| மீண்டெழும் (செயற் திட்டம் தவிர) | 269,025 | 285,528 | (16,503) |
| மூலதனம் (செயற் திட்டம் தவிர) | 199,450 | 132,206 | 67,244 |
| செயற் திட்டம் - உள்நாட்டு நிதியம் | 13,454 | 13,454 | 0 |
| செயற் திட்டம் - வெளிநாட்டு நிதியம் | 8,920 | 8,920 | 0 |
| **மொத்தம்** | **4,908,490** | **440,108** | **50,741** |

## நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்)

**அட்டவணை 23 : நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்)** ரூ 000'

| வருமான மூலம் | நிதி ஏற்பாடு | சேர்த்தல் | குறைபாடு/மேலதிகம் |
|---|---|---|---|
| இளமாணிப் பட்டக் கற்கை | 2,775 | 4,366 | 1,591 |
| பட்டப்பின் கற்கைகள் | 63,103 | 66,469 | (3,366) |
| ஆலோசனை சபை | 11,500 | 18,589 | 7,089 |
| வெளிவாரிப் பட்டம் | 88,915 | 72,620 | (16,295) |
| ஏனையவை | 53,254 | 75,426 | 22,172 |
| மொத்தம் | 272,801 | 237,470 | 11,191 |

இளமாணிப் பட்டத்தின் ஊடாக ஈட்டப்படும் வருமானம் தவிர கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனம் ரூபா 237,470,000 ஈட்டியது. அது அநேகமான பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் வருமானத்தைப் பார்க்கிலும் உயர்ந்த வருமானமாகும்.

**நிதிசார் செயற் திறன் பகுப்பாய்வு**

அட்டவணை 24 : நிதிசார் செயற் திறன் பகுப்பாய்வு ரூ 000'

| விடயம் | வாய்ப்பாடு | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செலவு /மாணவர் எண்ணிக்கை | 195 |
| ஒரு மாணவருக்கான மூலதனச் செலவு (மூ.செ) | மூ.செலவு / மாணவர் எண்ணிக்கை | 134 |
| **மொத்தம்** | | **239** |

**2015 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்கு கேட்போர்கூடம் மற்றும் விரிவுரை மண்டபத்திற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வாக்குறுதியளித்து அங்கீகரித்தாலும் நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்தினைப் பயன்படுத்தி நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதியில் ஒரு பகுதியைப் பெற்றுத் தருவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு நடவடிக்கை மேற்கொண்டது. ஆண்டிறுதியில் நான்கு மாடிக் கட்டிடத்தின் சட்டகத்தை பூர்த்தி செய்ததுடன் 2016 இல் அந்த திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 2014 ஆம் ஆண்டின நடுப் பகுதியில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. கட்டிடம் பற்றிய விபரம் அட்டவணை 25 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 25: உட்கட்டமைப்பு ரூ.000'

| உட்கட்டமைப்பு பற்றிய விபரம் | செலவு(ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| உணவகம் மற்றும் நிர்வாகக் கட்டிடம் - கட்டம் 1 | 49,318 | 100% |
| கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்தின் கேட்போர்கூடம் மற்றும் விரிவுரை மண்டபம் | 108,408 | 30% |

**ஏனைய விபரங்கள்/ இந்த அறிக்கையுடன் தொடர்பான செயற்திறன்**

கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்தின் செயற்பாடுகள் மீது தேசிய மற்றும் சர்வதேச ரீதியான கவனத்தை ஈர்த்துக் கொள்வதற்காக கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்திற்கான இணையத்தளம் மற்றும் சமூக வலையமைப்புக்கள் ஊடாக பிரச்சாரம் செய்யப்பட்டது. தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் உற்பத்திகளைப் பரப்புதல் ஒரு சமூகப் பொறுப்பாகுமென இந்த நிறுவனம் கருதுகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் புதன் கிழமைதோறும் காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரை ஒலி பரப்பும் வானொலி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பொது மக்களுடனான தொடர்பு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம் தகவல் விஞ்ஞானம் சம்பந்தமான சர்வதேச ஒலிம்ப்பியாட் (IOI) உட்பட சொப்ட்வெயார் போட்டிகளை நடாத்தி கல்வியமைச்சு மற்றும் பாடசாலைகளுக்கும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. ஜுலை 26 முதல் ஆகஸ்ட் 02 வரை கஸகஸ்தானின் அல்மாட்டில் நடைபெறவிருக்கும் IOI '15 போட்டியில் கலந்துகொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட தலைவர், உப தலைவர்களைக் கொண்ட நான்கு பேர்களைக் கொண்ட குழுவுக்கு IOI '15 உடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்தக் குழு மே மாதம் 09 ஆம் திகதி நடைபெற்ற தகவல் விஞ்ஞானம் பற்றிய ஒலிம்பியாட் ஆசிய பசுபிக் (APIO) போட்டியில் கலந்து கொண்டது.

பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்தின் பழைய மாணவர்களுடன் கூட்மொன்று நடாத்தப்பட்டதுடன், ஒக்டோபர் 08 ஆம் திகதி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது.

# கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம்

கொழும்பு பல்கலைக்கழகம்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று விபரமான நிதி நிலைமைக் கூற்று

| சொத்துக்கள் | குறிப்புக்கள் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| அசையாச் சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | | 214,728,408 | 230,982,413 |
| நீண்ட கால முதலீடுகள் | | 5,000,000 | 5,000,000 |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | | 33,533,975 | 34,451,935 |
| முடிவுறுத்தப்படாத நிர்மாணங்கள் | | 108,407,695 | 26,500,920 |
| அசையும் சொத்து | | | |
| மொத்தம் | | 2,800,202 | 2,755,377 |
| நடைமுறைக் கணக்கு | | – | – |
| கிடைக்கவிருப்பவை, முற்செலுத்துகை | | 55,962,035 | 68,937,373 |
| காசு, காசுக்குச் சமமானவை | | 642,565,557 | 649,119,872 |
| மொத்த நடமாடும் சொத்துக்கள் | | 701,327,794 | 720,812,622 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,062,997,874 | 1,017,747,900 |

## கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு விபரமான நிதிக் கூற்று (மீதிப் பகுதி)

| | குறிப்புக்கள் | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|
| <u>உரிமைகள், பொறுப்புக்கள்</u> | | | |
| <u>மூலதனம், இருப்புக்கள்</u> | | | |
| <u>மூலதனம்</u> | | | |
| செலவிடப்படாத அரசாங்க மூலதன ஒதுக்கீடு | | 7,155,617 | 11,708,963 |
| செலவிடப்பட்ட அரசாங்க மூலதன ஒதுக்கீடு | | 326,335,778 | 235,503,117 |
| செலவிடப்படாத மொத்த செயற் திட்ட ஒதுக்கீடு | | 3,083,213 | 9,096,416 |
| செலவிடப்பட்ட மொத்த செயற் திட்ட ஒதுக்கீடு | | 6,567,467 | 12,517,918 |
| கொழும்பு பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு | | 8,155,714 | 8,155,714 |
| மொத்தம் | | 351,297,789 | 276,982,128 |
| இருப்பு | | 368,478,077 | 403,940,980 |
| மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இருப்பு | | 3,000,000 | 3,000,000 |
| வரையறுக்கப்பட்ட நிதியம் | | 168,062,383 | 128,472,862 |
| <u>நிலையான பொறுப்புக்கள்</u> | | | |
| ஓய்வூதிய அனுகூலம் | | 33,625,108 | 34,251,258 |
| <u>அசையும் பொறுப்புக்கள்</u> | | | |
| ஏனைய செலுத்த வேண்டிய அட்டுரு செலவுகள் | | | |
| நடைமுறைக் கணக்கு | | 138,534,517 | 171,100,672 |
| மொத்தம் | | 138,534,517 | 171,100,672 |
| மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் | | 1,062,997,874 | 1,017,747,900 |

.....................

பிரதி நிதிப் பொறுப்பாளர்

இலக்கம் 1 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் 97 ஆம் பக்கம் முதல் 104 ஆவது பக்கம் வரை உள்ளடக்கப்பட்ட குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களில் முக்கிய பகுதிகளாகும். நிதிக் கூற்றைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பணிப்பாளர் சபை பொறுப்புக் கூறும். இந்த நிதிக் கூற்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக கையொப்பமிடப்பட்டது.

.....................

பணிப்பாளர்

.....................

பிரதிப் பணிப்பாளர்

2016.06.29

# கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம்
# கொழும்பு பல்கலைக்கழகம்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டிற்காக விபரமான நிதிச் செயற் திறன் கூற்று

| | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| இளமாணிப் பட்டப் பாடநெறி வருமானம் | | |
| அரசாங்க உதவி | 122,300,000 | 93,716,000 |
| தக்க வைத்துக்கொண்ட வருமானம் - உதவி | 17,264,973 | 15,261,355 |
| ஏனையவை | 5,015,342 | 4,367,219 |
| | 144,580,315 | 113,344,574 |
| செலவுகள் | | |
| ஆளுக்கான வேதனங்கள் | 116,837,727 | 89,779,332 |
| பிரயாணச் செலவுகள் | 392,231 | 161,441 |
| வழங்கல் | 5,724,199 | 8,057,216 |
| ஒப்பந்த சேவைகள் | 34,312,251 | 37,313,552 |
| ஓய்வூதிய அனுகூலங்கள் | 15,627,462 | 15,525,053 |
| கட்டணம், பங்களிப்புத் தொகை மற்றும் அங்கத்துவக் கட்டணம் | 224,673 | 108,890 |
| ஆளணி அபிவிருத்தி | 413,500 | 211,000 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 10,798,354 | 10,577,455 |
| கிரயம் | 30,017,067 | 21,418,266 |
| மொத்தம் | 214,347,465 | 182,879,205 |
| இளமாணிப் பட்டப் பாடநெறியினால் உருவாகிய பற்றாக்குறை | (69,767,151) | (69,534,629) |
| தொடர் பாடநெறிகள் | | |
| முதுமாணிப் பாடநெறி -(MSc) | 45,703,965 | 47,256,202 |
| வெளிவாரிப் பட்ட மையம் (BIT) | 10,837,541 | 37,012,897 |
| கணனி சேவை மையம் (CSC) | 799,107 | 2,255,363 |
| இ-கற்கை நிலையம் (eLC) | 12,458,408 | 11,285,752 |
| தொழில் அபிவிருத்தி மையம் (PDC) | 12,458,408 | 11,285,752 |
| டிஜிட்டல் பல்லூடகம் பற்றிய உயர் மையம் (ADMTC) | (658,271) | (289,738) |
| | (106,754) | 788,354 |
| தொடர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினால் உருவாகிய மேலதிகம் | 69,033,996 | 98,308,830 |
| செயற் திட்டங்கள் | | |
| வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்பட்ட செயற் திட்டங்கள் | 6,365,898 | 35,302 |
| ICTer Conference-2015 | 1,994,948 | 1,110,876 |
| IDRC மெய் நிகராக்கக் கிராமங்கள் | _ | 199,944 |
| செயற் திட்டங்களால் உருவாகிய மேலதிகம் | 8,360,846 | 1,346,122 |
| தீக்ஷன | 4,318 | 867,901 |
| நிகர மேலதிகம்/(பற்றாக்குறை) | 7,632,010 | 30,988,224 |

# கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனம்
# கொழும்பு பல்கலைக்கழகம்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டிற்காக விபரமான காசுப் பாய்ச்சல் கூற்று

| செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக ஈட்டிய காசுப் பாய்ச்சல்கள் | குறிப்புக்கள் | ரூ. | 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|---|
| ஆண்டிற்கான பற்றாக்குறை/ மேலதிகம் | | 7,632,010 | 7,632,010 | 30,988,224 |
| <u>சீர்படுத்துகை</u> | | | | |
| தேய்மானம் | | 41,535,502 | | 32,924,670 |
| பணிக் கொடைக்கான ஒதுக்கீடு | | 2,223,410 | | 3,686,567 |
| தக்க வைத்துக்கொண்ட வருமானம் | | (21,388,101) | | (19,585,628) |
| முன்னைய உதவிகளை மாற்றுதல் | | (9,657,353) | | (10,048,003) |
| PPP ஊடாக கிடைத்த இலாபம் | | (17,550) | | (190,806) |
| பரிமாற்றல் ஈட்டல் | | (6,321,986) | 6,373,922 | (408,592) |
| தொழிற்பாட்டு மூலதனம் மாற்றமடைய முன்னர் செயற்பாட்டுக் குறைபாடுகள் | | | 14,005,932 | 37,366,432 |
| தொழிற்பாட்டு மூலதனம் மாற்றமடைதல் | | | (19,635,637) | (11,886,227) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசு | | | (5,629,705) | 25,480,205 |
| <u>முதலீட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசுப் பாய்ச்சல்</u> | | | | |
| சொத்துக்கள், உபகரணங்கள் பெற்றுக்கொள்ளல் | | (22,425,594) | | (35,722,193) |
| உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | | (63,131,487) | | (89,612,748) |
| சொத்துக்கள், உபகரணங்கள் விற்பனை | | 0 | | 196,600 |
| சொத்துக்கள், உபகரணங்கள் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு | | (1,917,943) | (87,475,024) | (6,133,904) |
| | | | (93,104,729) | (105,792,040) |
| <u>நிதிச் செயற்பாடுகளினால் உருவாகிய காசுப் பாய்ச்சல்</u> | | | | |
| மூலதன உதவி கிடைப்பனவு - அரசாங்கம் | | 45,000,000 | | 15,000,000 |
| மூலதன உதவி கிடைப்பனவு - ஈட்டல் நிதியம் (தேறிய) | | 58,477,820 | | 41,343,330 |
| உட்கட்டமைப்பு வசதிகள் நிதயித்திலிருந்து மாற்றுதல் | | (87,467,258) | | |
| PPP விற்றல் | | 17,550 | | |
| செயற் திட்டத்திற்கான உதவிகள் கிடைப்பனவு | | 15,348,964 | | 16,271,736 |
| முன்னைய ஆண்டின் சீர்படுத்துகை | | 929,269 | | 2,000 |
| செயற் திட்ட மீதிகளை மாற்றுதல் | | _ | | 1,068,757 |
| செலுத்திய பணிக் கொடைகள் | | (2,797,809) | | (1,150,778) |
| வரையறுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து கிடைப்பனவு | | 50,719,890 | 80,228,426 | 35,380,673 |
| | | | (12,876,303) | 2,123,678 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு / குறைவு | | | | |
| பரிமாற்றல் இலாபம்/(நட்டம்) | | | 6,321,986 | 408,592 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | 649,119,874 | 646,587,603 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | 642,565,557 | 649,119,874 |

## கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம்

## முக்கிய நிதிசார் தகவல்கள்

| | ரூ. '000 | | | | |
|---|---|---|---|---|---|
| நிதியாண்டு | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| அரசாங்கத்தின் உதவி - மீண்டெழும் | 122,300 | 93,716 | 90,383 | 91,802 | 83,102 |
| அரசாங்கத்தின் உதவி - மூலதனம் | 43,082 | 15,000 | 25,759 | 19,150 | 16,000 |
| மொத்த அரசாங்க உதவிகள் | 165,382 | 108,716 | 116,142 | 110,952 | 99,102 |
| மீண்டெழும் செலவினம் - இள.பட்.பாடநெறி | 184,330 | 160,901 | 133,190 | 111,212 | 92,310 |
| மூலதனச் செலவினம் | 104,927 | 132,206 | 71,371 | 31,178 | 28,628 |
| மொத்தச் செலவு - இள.பட்.பாடநெறி | 289,257 | 293,107 | 204,561 | 142,390 | 120,938 |
| ஈட்டிய வருமானத்திலிருந்தான பங்களிப்பு | 61,845 | 184,391 | 88,419 | 31,438 | 21,836 |
| ஈட்டிய வருமானத்திலிருந்தான பங்களிப்பு % | 30% | 78% | 37% | 16% | 14% |
| ஈட்டிய தேறிய வருமானத்திலிருந்தான பங்களிப்பு % | 88% | 163% | 63% | 28% | 28% |
| ஈட்டிய வருமானம் | 211,430 | 247,470 | 242,025 | 194,230 | 159,429 |
| மீண்டெழும் செலவினம் - தொடர் கல்விப் பாடநெறி | 133,083 | 124,627 | 102,173 | 82,390 | 80,197 |
| வெளிநாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற் திட்டங்களுக்காகக் கிடைத்த உதவிகள் | 14,176 | 9,713 | 9,341 | 5,639 | 6,202 |
| உள்ளக மாணவர் எண்ணிக்கை | 770 | 850 | 879 | 737 | 737 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 207 | 179 | 144 | 144 | 144 |
| ஒரு மாணவருக்கான வருடாந்த மீண்டெழும் செலவு ('000) | 195 | 190 | 152 | 151 | 125 |
| ஒரு மாணவருக்கான வருடாந்த மூலதனச் செலவு ('000) | 134 | 156 | 81 | 42 | 39 |
| ஒரு ஊழியருக்கான வருடாந்த செலவு ('000) | 881 | 795 | 774 | 670 | 578 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } එච්ඊඩී/බී/යූසීඑස්සී/6/15/03

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 මාර්තු 14 දින

UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING ★ FINANCE 04 APR 2017 DIVISION

අධ්‍යක්ෂ,

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය.

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනයේ 2015 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2002 අංක 01 දරන කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතන නියමාවලියේ 23 වගන්තිය හා 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108(1) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2016 දෙසැම්බර් 09 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.ප්‍රේමනන්ද

නියෝජ්‍ය විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING ★ 03 APR 2017

පිටපත් :

1. ලේකම් - උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය
3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති - කොළඹ විශ්වවිද්‍යාලය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/பீ/யூசீஎஸ்சீ/6/15/03

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 திசெம்பர் 09

பணிப்பாளர்,

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு காலக்கிரமத்தில் அனுப்பப்படும்.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 207,525,093 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த பெறுமதிக்கும் இடையே ரூபா 75,821,489 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும், தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் சேவை வழங்குவதற்காக ரூபா 1,747,525 தொகையொன்று பெற வேண்டியிருந்த போதிலும், இந்த மீதியை அறவிடுவதற்கு நிறுவகத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடர் கடன் வழங்கும் போது பல்கலைக்கழக சேமலாப நிதியத்தை பிணையாகப் பயன்படுத்திய மூன்று நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 217,584 கூட்டுத்தொகையான கடன் மீதிக்காக 16 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடையிலான காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கை பிணைமுறி மீறப்படாமையின் காரணமாக மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,057,990 கடன் மீதியை அறவிடுவதற்காக பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் ஏற்பாடு மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371 | பதவிநிலையற்ற 50 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 8,738,543 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 இன் 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | முற்பணம் வழங்கக்கூடிய ஆகக் கூடிய எல்லைக்கான ரூபா 100,000 இனை விஞ்சி நிறுவகத்தினால் 31 சந்தர்ப்பங்களின் போது ரூபா 104,150 முதல் ரூபா 325,750 வரையிலான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2004 யூலை 29 இன் பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது ரூபா 561,816,857 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் 39 கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறைகளைப் பதிவு செய்யாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 61,951,795 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆந் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | செயற்திட்ட இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,269,536 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தில் கம்பனியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி அமைச்சினதும் சிபாரிசுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் கம்பனிச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டின் போது தீக்ஷண கம்பனி என்ற பெயரில் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முறையான அங்கீகாரமின்றி நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற வெளிவாரி பாட நெறிகளின் வருமானத்தில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2.102,100 தொகை கௌரவப்படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் சகல வருமானங்களும் நிறுவகத்தின் பெயரிலுள்ள நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் முறையான அங்கீகாரமின்றி நிறுவகத்தினால் பல்வேறு பெயர்களின் 06 நிதியங்கள் பேணப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் வருமானத்தில் ரூபா 39,349,567 தொகையும் வெளிநாட்டு செயற்திட்டத்திற்காகப் கிடைத்த பணத்தில் ரூபா 40,332,985 தொகையும் மேற்கூறப்பட்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கணணி கற்கை நிறுவக வழிகாட்டியின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் புதிதாக ஆரம்பிப்பதற்குத் தீர்மானத்த பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகம் நடாத்திச் செல்கின்ற 05 விஞ்ஞானமாணி, முதுமாணி மற்றும் இளமாணி பாட நெறிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 7,632,010 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,988,224 ஆக இருந்தமையால். முன்னைய ஆணடுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 23,356,214 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 28,584,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் நிர்வாகச் செலவினம் ரூபா 27,058,395 இனால் அதிகரித்தமை மற்றும் பாடநெறி வருமானம் ரூபா 29,274,834 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது கடந்த 04 வருடங்களுடனும் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மிகை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசிற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பங்களிப்பு 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பின்பற்றுகின்ற 9/2010 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட தூர அளவின் அடிப்படையில் அழைப்பு விடுவிக்கப்பட்ட விரிவுரையாளருக்கும் போக்குவரத்து படியொன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் வருகைதரும் ஒரு நாளைக்கு ரூபா 1,000 வீதம் நிலையான தொகையின் அடிப்படையில் 38 விரிவுரையாளர்களுக்கு ரூபா 517,000 போக்குவரத்துப் படி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மருத்துவ காப்புறுதித் திட்டமொன்று பேணிச்செல்லப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது பாட நெறியிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 2,159,349 தொகை மற்றும் செயற்திட்டங்களின் மிகையிலிருந்து ரூபா 1,014,208 தொகை மேற்கூறப்பட்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த நிதியத்திலிருந்து ரூபா 3,137,921 தொகை மருத்துவ பட்டியல்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் பதவியணியினரால் நிதிகளை பயன்படுத்துவதன் மூலம் நடாத்திச் செல்கின்ற நலன்புரி நிதியமொன்றிற்கு பாடநெறியிலிருந்து உழைக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 3,204,717 தொகை மற்றும் செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற வெளிநாட்டு நிதியத்திலிருந்து ரூபா 1,014,208 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட நிதி மாற்றங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி என்பவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பேராசிரியர்.வீ.கே. சமரனாயக்க நிதியத்தின் மீதி ரூபா 14,306,550 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியம் குறித்த நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரியவாறு செலவினங்கள் எதிர்வு கூறப்பட்டு செலவின மதிப்பீடு தயாரிக்கப்படாமல் முற்பணம் வழங்கப்பட்டமையின் காரணமாக 22 சந்தர்ப்பங்களின் போது தேவையாக இருந்த ரூபா 160,112 கூட்டுமொத்த செலவினங்களுக்காக ரூபா 427,250 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தீக்ஷண கம்பனி தனியாக சட்டரீதியான அலகொன்றாக தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நிர்வாக நடவடிக்கைகளை கணனி கற்கை நிறுவகத்தில் நடாத்திச் செல்லுதல் நிறுவகத்தின் பதவியணியினரும் கம்பனியின் பதவியணியினர்களும் ஒரே பிரிவில் செயற்படுதல், பௌதீக வளங்களை பொதுவாகப் பயன்படுத்துதல் போன்றவற்றின் காரணமாக கணனி முறைமையை வடிவமைத்தல் மற்றும் கணனி விரிவுரைக்காக கிடைத்துள்ள கட்டளைகள் மற்றும் வருமானம் என்பவற்றை குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) நிறுவகத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய இரண்டு மென்பொருள் பொறியியலாளரின் சேவை 2015 சனவரி 31 ஆந் திகதி முடிவுறுத்தி அந்த இரண்டு பொறியியலாளர்களும் தீக்ஷண கம்பனிக்கு 2015 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) திக்ஷண கம்பனியின் பிரதான வியாபார நடவடிக்கைகள் கணனி கற்கைகள் நிறுவகம் வழங்குகின்ற சேவைக்கு சமமானவையால் தீக்ஷண கம்பனி கணனி கற்கை நிறுவகத்தின் போட்டி வியாபாரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தீக்ஷண கம்பனியின் கணக்கீட்டு நடவடிக்கைகள் கணனி கற்கைககள் நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக கணக்காண்டில் ரூபா 251,000 தொகை நிதியாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் அரசாங்கமும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களும் 51 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்தைக் கொண்டுள்ள கம்பனிகளின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணனி கற்கை நிறுவகத்திற்கு 100 சதவீத உரித்துடைய தீக்ஷண கம்பனியின் வெளிக் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரமின்றி தனியார் கணக்காய்வுக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) தீக்ஷண கம்பனி தமது சேவை நாடுனர்களிடமிருந்து கிடைக்கின்ற கட்டளைகளின் பெறுமதியில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகையை அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய பதவியணியினருக்கு படியாக வழங்கும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டமையின் காரணமாக ஏனைய தொடர்புடைய செலவினங்களுடன் மொத்தச் செலவினங்கள் அனேகமாக வருமானத்தை விஞ்சக் கூடியதாக இருந்தமையாலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 5,005,000 சேவை வருமானமொன்று பெறப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 4,318 தொகையான மிகை மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

செயற்திட்டத்திற்காக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற நிதியில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 65 மில்லியன் மீதியொன்று காணப்பட்டதுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அந்தக் கணக்கின் மீதி முறையே ரூபா 44 மில்லியன் மற்றும் ரூபா 51 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் உரிய நிதி இலக்கிடப்பட்ட பணிகளிற்காக உரிய பிரகாரம் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக நிதியை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானமொன்றை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட 92 வெற்றிடங்களுக்காக ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கும் புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் 66 ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கி தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தின் தாய் நிறுவனமான கொழும்பு பல்கலைக்ககழகத்தில் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் இருவரை உள்ளடக்கிய வலுவான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கும் போதும், கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள சகல நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வு அந்த கணக்காய்வுப் பரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கணனி கற்கை நிறுவகத்தில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருடாந்த கணக்காய்வு கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 350,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்கள் உரியவாறு பதிவேடுகளுக்குக் கொண்டவரப்படாமை, மீள் பெறுமதியிடாமை, பொருட்பதிவேட்டுப் புத்தகம் பராமரிக்காமை, |
| (ஆ) | முற்பணக் கட்டுப்பாடு | பதவிநிலையற்ற உத்தியோகத்தருக்கு முற்பணம் வழங்குதல், எல்லையை மிகைத்து முற்பணம் வழங்குதல், தேவையை இனங்காணாது கண்டறிந்து முற்பணம் வழங்கியமை |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர் தேவையின் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்துதல், மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஈ) | புதிய பாடநெறிகளை ஆரம்பித்தல் | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

ஒப்பம் :- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

2017-01-06

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி
பத்தரமுல்லை.

ஐயா

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான 2002 இன் 1 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் விவரக் குறிப்பின் 23 ஆவது உறுப்புரை மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(1) உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற் குறிப்பிடப்பட்ட அறிக்கைக்கான பதில்களை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் 2016.12.30 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை மற்றும் 2017 ஜனவரி 05 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

நிறுவனத்தினால் அதன் நிலையான சொத்துக்கள் ஆவணத்தை கணனி மயப்படுத்தி மீண்டும் தயாரிப்பதற்கு ஆரம்பித்துள்ளதுடன் அதன் கீழ் தேய்மானத்திற்குற்பட்ட மொத்த சொத்துக்களையும் மீள் மதிப்பீட செய்யப்பட்டு மறு மதிப்பீட்டுப் பெறுமதிகளை கணக்குகளில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

2.2.2 நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிட்ட சொத்துக்களின் பெறுமதிகளிடையேயான வேறுபாடு ரூபா 75,821,489.00 அன்றி ரூபா 62,681,382.00 ஆகும். நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இவ்வாறு அதிகரித்துக் காணப்படுவதற்கான காரணம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிதிக் கூற்றுக்களில் இருந்து சொத்துக்கள் நீக்கப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படாமையாகும். நிலையான சொத்துக்கள் பதிவேட்டை சீர் செய்ததன் பின்னர் இந்த வேறுபாடு நீங்கி விடும்.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) இந்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு அவ்வப்போது நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன், வாய் மூலமாகவும் வினவப்பட்டு பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக முன்னுரிமை அளித்து குறிப்பிட்ட தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) அறவிடப்பட வேண்டிய இடர் கடன் தொகையான ரூபா 217,584.00 தொகையை அவர்களது சேமலாப நிதியத்திலிருந்து அறவிட்டுத் தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் கோரப்பட்டுள்ளதுடன் அக் கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(இ) திரு. எஸ்.ஜே. பகீரதன் (ரூ. 3,440,575.75) திரு. ருக்மன் சேனாநாயக்க (ரூ. 798,588.54) மற்றும் கலாநிதி திரு. உபாலி விக்கிரமசிங்க (ரூ. 2,819,179.79). சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் திரு. எஸ்.ஜே. பகீரதனுக்கு எதிராக DMR/07902/10 ஆம் இலக்கத்தின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. திரு. ருக்மன் சேனாநாயக்கவுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் இலங்கையை விட்டுச் சென்று வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள் என பொலீசாரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. ஆனாலும் அவர்களது வெளிநாட்டு வதிவிட முகவரிகளை கண்டறிய முடியாதிருப்பதனால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் முடியாதிருக்கின்றது. எவ்வாறாயினும் அவர்கள் இருவரினதும் சேமலாப நிதியத்திலிருக்கும் சேமிப்பை கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்திற்கு அறவிட்டுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கலாநிதி திரு. உபாலி விக்கிரமசிங்க அவர்களின் வட்டியுடன் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,819,179.79 தொகையை 12 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு முகாமைத்துவ சபையின் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய அவர், 2016.12.15 ஆம் திகதியாகும்போது ரூபா 1,480,195.94 செலுத்தியுள்ளதுடன் அதனுடன் இணையான வகையில் அவருடைய சேமலாப நிதியத்திற்குரிய பங்களிப்புத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) நிறுவனத்தில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பதனாலும், நிறுவனத்தில் முற்பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மேற்கொள்ள முடியாதிருப்பதனாலும் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் பாடநெறியின் தன்மையைப் பொருத்து இங்கு பரீட்சைகளை நடாத்துவதற்கு மற்றும் மாணவர்களை பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை அலுவலகத்திற்கு வெளியே நாடு பூராவும் உள்ளடக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம், காலி, கண்டி போன்ற இடங்களில் மேற்கொள்வதற்கான தேவை நிலவியதால் அந்த நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் செலவு செய்ய வேண்டியேற்படுவதனாலும் நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் அந்த முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 2015 ஆம் ஆண்டில் அல்லது 2014 ஆம் ஆண்டில் எந்தவிதமான மேலதிக முதலீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. 2015 ஆம் ஆண்டில் மொத்த முதலீடுகளின் அளவு 23 மில்லியன் ரூபாவினால் குறைவடைந்துள்ளது. 2014 ஆண்டிற்கு முன்னர் உரிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

(ஈ) நிறுவனத்தின் அனைத்து கல்வி சாரா பணியாட் தொகுதியைச் சேரந்தவர்கள் வருகை மற்றும் வெளியேறும் நேரத்தை விரல் அடையாள இயந்திரத்தில் தமது கைவிரல் அடையாளத்தை இட்டு குறிப்பிடுதல் வேண்டும். அது தவிர ஒப்பந்த அடிப்படையில் மற்றும்

நாள் சம்பள அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஊழியர்களும் வருகை மற்றும் வெளியேறும் நேரத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றனர். ஆனால் கல்வி சார் பணியாட் தொகுதி மற்றும் உதவி கல்வி சார் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்கள் வருகை மற்றும் வெளியேறும் நேரத்தை விரல் அடையாள இயந்திரத்தில் தமது கைவிரல் அடையாளத்தை இட்டு குறிப்பிடுவதில்லை.

(உ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத் திட்டத்திற்குரிய ஆதனங்களும்(சொத்துக்களும்) நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆதனங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.5 போதுமானளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இது தொடர்பாக முறையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது கொழும்பு பல்கலைக்கழக நிர்வாக சபையினால் தீக்ஷன கம்பனியை அமைப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அமைச்சரவை அங்கிகாரத்திற்கான வேண்டுகோள் உயர் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) உண்மையிலேயே இந்தக் கொடுப்பனவுகள் கௌரவபூர்வமான கொடுப்பனவாக அன்றி நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கல்விசார் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் தமது அலுவல்கள் தவிர வெளிவாரிப் பட்டப் பாடநெறி மற்றும் பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மேலதிக அலுவல்கள், ஏற்றுள்ள பொறுப்புக்கள் மற்றும் மேலதிக அலுவல்களுக்காக செலுத்தப்படும் கொடுப்பனவாகும்.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான நிதி ஒவ்வொரு பாட நெறிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மறைமுகச் செலவுகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் ஊடாக செலுத்துகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செலுத்துகைகளை வரவு செலவுத் திட்டத்தில் மறைமுகச் செலவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் வெளிவாரி மற்றும் பட்டப்பின் பாடநெறிகளில் அந்த வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் மேற்கொள்ளும் மேலதிகப் பணிகளுக்காக இந்தக் கொடுப்பனவை செலுத்த வேண்டுமென நிறுவனத்தின் நிதி மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ)நிறுவனத்தின் ஊடாக பல்வேறு நிதியங்கள் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியம், மாணவர் இடர் நிதியம்) என்பன 2004.04.30 ஆம் திகதிய திறைசேரிச் செயலாளரின் கடிதத்தின் ஏற்பாடுகளுக்கமையவே அமைக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதியை மாற்றுவதற்காக நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான வரவு செலவில் மறைமுக செலவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) இந்த 5 பாடநெறிகளுக்கும் கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதற்கான

அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) நிறுவனத்தினால் நடாத்தப்படும் தகவல் தொழில்நுட்ப பட்டப்பின் கற்கைப் பாடநெறிகளுக்கு தகைமைகள் மற்றும் அனுபவம்மிக்க விரிவுரையாளர்களை வார இறுதி நாட்களில் அலுவல் நடவடிக்கைகளுக்காக அழைக்கப்படுவதனை ஊக்குவிப்பதற்காக அவர்களால் செலவு செய்யப்படும் தனிப்பட்ட போக்குவரத்துக் கட்டணத்தில் ஒரு பகுதியை மீளச் செலுத்துவதற்காக இந்தப் படி செலுத்தப்பட்டது.

ஆனாலும் கணக்காய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சீர் செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) நிறுவனத்தின் ஊடாக அதன் பணியாட் தொகுதி அங்கத்தவர்களின் சுகாதாரக் காப்புறுதிக்காக வெளிவாரியான காப்புறுதி நிறுவனமொன்றில் காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் நிதிக் குழுவானது கொழும்பு பல்கலைக்கழகத்தில் தற்போது அமுல்படுத்தப்படும் விதத்திலான சுகாதாரப் பாதுகாப்பு முறையொன்றை உள்ளக அடிப்படையில் செயற்படுத்தப்படல் வேண்டுமென சிபாரிசு செய்ததுடன் முகாமைத்துவ சபையினால் அதனை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிதியத்திற்குத் தேவையான நிதியை பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள் மற்றும் பட்டப் பாடநெறிகளுக்காக அறவிடப்படும் நிதி மற்றும் பணியாட் தொகுதி அங்கத்தவர்களின் பங்களிப்பு என்பவற்றின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுகாதாரக் காப்புறுதிக்காக பாடநெறிகளின் ஊடாக ஈட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதற்கான அங்கீகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் UGC/F/HIS ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

(இ) நிறுவனத்தின் கல்விசார், கல்வி சாரா மற்றும் நிர்வாகப் பணியாட் தொகுதி அங்கத்தவர்களின் ஆளுமை விருத்தியின் ஊடாக நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் மற்றும் அவர்களின் குழுச் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுவனத்தின் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவனத்தின் நிதி மற்றும் முகாமைத்துவக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் அதற்குத் தேவையான நிதி, வருமானம் ஈட்டப்படும் பாடநெறிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மறைமுகச் செலவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்படுகின்றது.

4.2 (அ) இந்த நிதியத்தின் விதிமுறைகளுக்கமைய ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் விசே நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள பேராசிரியர்கள் வருடாந்தம் இந்த நிறுவனத்திற்கு சமுகமளித்து சேவையாற்றியுள்ளபோதும் அவர்கள் பேரசிரியர் வீ கே சமரநாயக்க அவர்களுக்கு காணிக்கையாக தன்னார்வ அடிப்படையிலேயே சேவையாற்றியுள்ளனர். அதனால் இந்த நிதியத்திலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) முகாமைத்துவ சபைக்கான செலவுகள், நிதிக் குழுக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் என்பவற்றுக்காக வழங்கப்படும் முற்பணங்களில் வருகை தராத அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை மீளச் செலுத்தியதனால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

அனைத்து முற்பணச் செலுத்துகைகளும் உரிய மதிப்பீட்டின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.3 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்ளை வெளிப்படுத்தாமை

(அ) தீக்ஷன கம்பனி பயன்படுத்தும் பௌதீக வளங்களுக்காக அந்த நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவனத்தின் முகாமைத்துவ சபை தீர்மானிக்கும் கூலழுயு செலுத்தியுள்ளது. தீக்ஷன கம்பனியின் நடவடிக்கைகள் கணனி நிறுவன வளாகவில் மேற்கொள்ளப்பட்டாலும் அந்த கணனி நிறுவனத்தின் முகாமைத்துவ சபை உரிய கூலியை வருடாந்தம் செலுத்தியுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்திற்கென்றே ஒதுக்கப்பட்டுள்ள செயற் திட்டங்களை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்திற்கு மாத்திரம் வழங்கப்படுவதுடன், பெறுகை நடைமுறையின்(Tender Procedure) கீழ் போட்டி அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் செயற் திட்டங்களை மாத்திரம் தீக்ஷன கம்பனி பெற்றுக் கொள்கின்றது. அதற்கமைய கணனி நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற எந்தவொரு செயற் திட்டத்தையும் தீக்ஷன கம்பனிக்கு வழங்கவில்லையென பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஆ) இந்த இரு ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் கணனிக் கற்கை நிறுவனத்தில் மென்பொருள் பொறியியலாளர்களாக (software engineer) பணியாற்றிய ஊழியர்களாவர். ஆனாலும், கணனி நிறுவனமானது அரசாங்க நிறுவனமாக இருப்பதனால் மென்பொருள் பொறியியலாளர் பதவி அல்லது அப்பதவிக்குரிய சம்பள அமைப்போ உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலைமையில் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து கோரிய சம்பளம் மற்றும் ஊதியங்களை பெற்றுக்கொடுக்க முடியாதிருந்ததன் காரணமாக அவர்கள் விலகிக்கொண்டார்கள். அதன் பின்னர் தீக்ஷன கம்பனி இவர்கள் இருவரையும் சேவைக்குச் சேர்த்துக் கொண்டுள்ளது.

(இ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனம் உயர் கல்வி நிறுவனமொன்றாக இருப்பதுடன், அதன் அடிப்படை நோக்கம் அங்கீகாரம் பெற்ற மற்றும் சான்றிதழ் பாடநெறிகளை நடாத்துவதாகும். தீக்ஷன கம்பனியின் அடிப்படை நோக்கம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தேவைகளின் அடிப்படையில் மென் பொருள்களை உற்பத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதாகும். எனவே,கணனிக் கற்கை நிறுவனம் மற்றும் தீக்ஷன கம்பனி எனும் இரண்டு நிறுவனங்களினதும் நோக்கம் எந்த வகையிலும் சமமானதாக இல்லையென்பதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே, தீக்ஷன கம்பனி எந்த வகையிலும் கணனிக் கற்கை நிறுவனத்திற்கு போட்டியான நிறுவனமொன்று இல்லை.

(ஈ) கணனிக் கற்கை நிறுவனத்தின் சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர், தனது அலுவலகக் கடமைக்கு வெளிவாரியாக இந்த அலுவலை மேற்கொண்டதனால் இது அவரது உத்தியோகபூர்வ அலுவலுடன் தொடர்பான நடவடிக்கை இல்லை. அவரது தொழில் தகைமையின் மூலம் அலுவல் நேரத்திற்குப் பின்னர் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அலுவலாக இருப்பதனால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் அலுவல்களுக்கு எந்த விதமான தடையோ, தாக்கமோ ஏற்படவில்லை.

(உ) தீக்ஷன கம்பனியானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் தெளிவுடன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பிணையினால் வரையறைக்குட்பட்ட ஒரு கம்பனியாகும். இதன் அங்கத்தவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் நிரந்தர பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், ரூபா 100.00 செலுத்தி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்

வேண்டும். கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் விவரக் குறிப்பின் கீழ் கம்பனியொன்றை தாபித்துக்கொள்வதற்கு நேரடியாக சட்ட ரீதியான அதிகாரமொன்று கிடைக்கப் பெறவில்லை. தீக்ஷன கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு தீர்மானமொன்றை எடுப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வினவப்பட்டுள்ள விடயங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் ஊடாக அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஊ) தீக்ஷன கம்பனியை தாபிப்பதன் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச மென் பொருள் தேவைகளை நிறைவேற்றும் சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. உதாரணமாக, பொலிஸ் திணைக்களத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தற்போது நாடு பூராவும் நடைமுறைப்படுத்தப்படும் விரல் அடையாளத்தை இனங்கண்டு கொள்ளும் மென்பொருள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்காகத் தயாரிக்கப்பட்ட மாணவர் நுழைவு மென்பொருள், பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் மென்பொருள் மற்றும் உயர் நீதிமன்றத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளைப் பதியும் மென் பொருள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த சேவைகளை தீக்ஷன கம்பனி இலாப நோக்கத்தில் அன்றி நாட்டுக்கான தேவையைக் கருதியே இந்த சேவைகளை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுத்தது. எவ்வாறாயினும் இந்த கணக்காய்வு அறிக்கையை கொழும்பு பல்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் ஊடாக தீக்ஷன நிறுவனத்தின் ஆய்வு சபைக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.4 குறிப்பிட்ட செயற் திட்டங்களை சிறப்பாக நிறைவு செய்து எஞ்சிய தொகை மற்றும் அந்த நிதியங்களின் முதலீட்டு வருமானத்தினால் இந்த மீதி ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட செயற் திட்டங்களை சிறப்பாக நிறைவு செய்து கணக்காய்வு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் குறிப்பிட்ட நிதியை வழங்கிய நிறுவனங்கள் அந்த நிதி தொடர்பாக அவர்களது பரிந்துரைகளை இதுவரை முன்வைக்கவில்லை. அதனால் தற்காலிகமாக பாதுகாப்புக் கருதி அந்த நிதியை நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் வேண்டுமென முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

இந்தக் கணக்கின் மீதிகள் அதற்காக ஆரம்பிக்கப்பட்ட வதிவிட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் (RFC Accounts) அமெரிக்க டொலர்களில் US $ மற்றும் அமெரிக்க டொலர் US $ நிலையான இருப்புக்களிலாகும்.

### 4.5 ஆளணி (பணியாட் தொகுதி) நிர்வாகம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக முன் பயிற்சி பெற்ற பணியாட் தொகுதியொன்று தேவையாக இருப்பதனால் ஆரம்பத்தில் பயிற்சி அடிப்படையில் கல்விசார் உதவி மற்றும் கல்விசாரா பதவிகளுக்கு பொருத்தமான வகையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட பணியாட் தொகுதி தற்போது சேவையில் ஈடுபட்டிருப்பதுடன் தற்போது Zero base அடிப்படையில் இந்த நிறுவனத்திற்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மதிப்பீடு மற்றும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதனால் அந்த அலுவல் நிறைவு பெற்றவுடன் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் பணியாட் தொகுதியை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

5. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்ஆளுகை

5. 1 உள்ளகக் கணக்காய்வு

எமது நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை கொழும்பு பல்கலைக்கழக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளுதல் தொடர்பாக எமது நிறுவனத்தின் எந்த விதமான எதிர்ப்பும் இல்லையென்று நாம் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளோம். ஆனாலும், அண்மைய சில வருடங்களாக அந்தப் பிரிவின் ஊடாக எமது நிறுவனத்தின் ஆளணிக்கான சம்பளம் செலுத்தல், பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு உரிய தொகையை விடுவித்தல் போன்ற ஆரம்ப கணக்காய்வு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பிரிவில் பணியாற்றும் வரையறுக்கப்பட்ட ஆளணியினால் நிறைவேற்றுவதற்கு அதிகளவு அலுவல்கள் இருப்பதனாலேயே இந்த ஆரம்ப கணக்காய்வு நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதென கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின்போது சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார்.

எமது நிறுவனத்தின் ஊடாக வழிநடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் பாடநெறியைப் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களில் நாடு பூராவும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களில் சுயாதீனமான ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென நிறுவனத்தின் முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

ஆரம்பம் முதலே இந்த உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் துணையாக இருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவானது அதன் மூலம் கிடைக்கும் அனுகூலத்தைப் பார்க்கிலும் அதிகமென முகாமைத்துவ சபை தீர்மானித்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ)நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

இந்த நிறுவனத்தில் காணப்படும் சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது பாவனையில் உள்ள ஆவணப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிக்கமைய தேய்மானத்திற்குட்பட்ட பொருட்களை மீள மதிப்பீடு (Revaluation) செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது பயன்படுத்தப்படும் 2016.12.31 ஆம் திகதியன்று பதிவேட்டின் பிரகாரம் பெறுமதிக்கமைய தேய்மானத்திற்குட்பட்ட சொத்துக்களை மீள மதிப்பீடு செய்து பதிவேட்டில் பதியப்படும் நடவடிக்கைகள் 2017.01.15 ஆம் திகதியன்று நிறைவு செய்யப்படும். இந்த நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் இந்த சிக்கல் தீர்க்கப்படும்.

(ஆ)குறித்துக் கொண்டேன்.

(இ)ஆளணி (பணியாட் தொகுதி) நிர்வாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் Zero base அடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை சம்பந்தமாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெறும் வரை இந்த நடவடிக்கையை பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்றது.

(ஈ) குறித்துக் கொண்டேன்.

இப்படிக்கு – உண்மையுள்ள

**பேராசிரியர் கே.பீ.ஹேவாகமகே**
பணிப்பாளர்

பிரதிகள்:

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. செயலாளர், நிதியமைச்சு
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு
4. உப வேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம்
5. கணக்காய்வு அத்தியட்சகர் - கொழும்புப் பல்கலைக்கழகப் பிரிவு